ஓம்.
பரப்பிரம்மணே நமஃ.
"ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி."

# இகபரசுகசாதனி.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 11 APR 1904 MADRAS.

வால்யம் I. } 1903ளு நவம்பர்மீ {புத்தகம் VII.

## மனனமாலை.

இந்திரசா லங்கனவு கானனீ ரெனவுலக
மெமக்குத் தோன்றச்
சந்ததமுஞ் சிற்பரத்தா லழியாத தற்பரத்தைச்
சார்ந்து வாழ்க
புந்திமகி ழுறநாளுந் தடையறவா னந்தவெள்ளம்
பொலிக வென்றே
வந்தருளுங் குருமௌனி மலர்த்தாளை யனுதினமும்
வழுத்தல் செய்வாம்.

---

சும்மா விருக்கச் சுகஞ்சுகமென்று சுருதி யெல்லா
மம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு மறிவின்றியே
பெம்மான் மவுனி மொழியுந் தப்பியென் பேதமையால்
வெம்மாயக்காட்டி லலைந்தே னந்தோவென் விதிவசமே.

---

நினையு நினைவு நினையன்றி யில்லை நினைத்திடுங்கால், வினையென் றொருமுத னின்னையல்லாது விளைவதுண்டோ, தன்னையுந் தெளிந் துன்னைச் சார்ந்தோர்க ளுள்ளச் செந்தாமரையா, மனையும் பொன்மன்றமு நின்றாடுஞ் சோதிமணி விளக்கே.

---

நீர்மையால் நெஞ்சம் வஞ்சித்துப் புகுந்தென்னை
ஈர்மைசெய் தென்னுயிரா யென்னுயி ருண்டான்
சீர்மல்கு சோலைத் தென்காட்கரை யென்னப்பன்
கார்முகில் வண்ணன் றன்கள்வ மறிகிலேன்.

---

அறிகிலேன் றன்னு ளனைத்துலகும் நிற்க
நெறிமையால் தானு மவற்றுணிற்கும் பிரான்
வெறிகமழ் சோலைத் தென்காட்கரை யென்னப்பன்
சிறிய வென்னு ருயிருண்ட திருவருளே.

---

திருவருள் செய்பவன் போலவென் னுள்புகுந்
துருவமு மாருயிரு முடனே யுண்டான்
திருவளர் சோலைத் தென்காட்கரை யென்னப்பன்
கருவளர்மேனியென் கண்ணன் கள்வங்கமே.

---

தானேயாகி நிறைந் தெல்லாவுலகு முயிருந் தானேயாய்த், தானேயா னென்பானாகித் தன்னைத்தானே துதித்தெனக்குத், தேனேபாலே கன்னலே யமுதே திருமா லிருஞ்சோலைக், கோனேயாகி நின்றொழிந்தா னென்னை முற்றுமுயி ருண்டே.

---

மாயஞ்செய்யே லென்னையுன் திருமார்பத்து மாலை நங்கை, வாசஞ்செய் பூங்குழலாள் திருவாணை நின்னாணை கண்டாய், நேசஞ்செய் துன்னோடென்னை யுயிர்வேறின் றியொன்றாகவே, கூசஞ்செய் யாதுகொண் டாயென்னைக் கூவிக்கொள்ளாய் வந்தந்தோ.

---

சரிதையி லேயீசன் சடவடிவாய் நின்றான்
கிரியையிலே மந்திரத்திற் கிட்டி - யருகிருந்தா
னூனமிலா யோகத்தி லுள்ளொளியா யேநின்றான்
ஞானமதி னானயி னான்.

---

சமயமே பரமென்னுஞ் சமத்த ராய்ச்
சமயசாத் திரங்காட்டுஞ் சழக்கர் காள்
சமயமென்னுஞ் சத்தார்த்த மூணர் கிலீர்
சமயமென்பது தன்னை யறிதலே.

---

பூசை யென்பது பூவொடு பாணியோ
வாசை கோப மகந்தை யகற்றியே
நீச வைம்பொறி நெஞ்சு ணிறுத்தியே
யீச னைத்தம் மிதயத்துட் காண்டலே.

---

ஒன்றென்று சொல்வதற்கு முறையில்லை நாவில்லை
யன்றிதா மென்பதற்கு மறிவில்லை செயலில்லை
சென்றொடுங்குமாறில்லை சேரா நிற்பதுமில்லை
நன்றுமிலை தீதுமிலை நானுமிலை நீயுமிலை.

---

தாயிருந்தும் பிள்ளை தளர்ந்தாற் போலெவ்விடத்து
நீயிருந்து நான்றளர்ந்து நின்றேன் பராபரமே.

---

காச்சச் சுடர்விடும்பொற் கட்டிபோ னின்மலமாய்ப்
பேச்சற் றவரே பிறவார் பராபரமே.

---

பற்றொழிந்து சிந்தைப் பதைப்பொழிந்து தானேதா
னற்றிருப்ப தென்றைக் கமைப்பாய் பராபரமே.

---

உன்னு வெளியா யுறங்காத பேருணர்வா
யென்னுவிக் குள்ளே யிருந்தாய் பராபரமே.

---

தீதெனவு நன்றெனவுந் தேர்ந்து நான்றேர்ந்தபடி
யேதுநடக்க வொட்டா தென்னே பராபரமே.

---

நித்திரையும் பாழ்த்த நினைவு மற்றுநிற்பதுவோ
சுத்தவருணிலை நீ சொல்லாய் பராபரமே.

---

தூங்கிவிழித் தென்னபலன் றூங்காமற் றூங்கிநிற்கும்
பாங்குகண்டாலன்றோபலன்காண்பேன்பைங்கிளியே.

---

## " ஸர்வம் பிரம்மமயம் ஜகத் "

இவ்வுலகமெல்லாம் பிரம்ம சுவரூபமாகவேயிருக்கிறது. இதையுள்ளபடி உணர்ந்தவர்கள் சர்வப்பிராணிகளையும் பகவத் சுவரூபமாய் நினைத்து ஸதா ஈசுவரனையே தியானஞ்செய்வார்கள். எங்கும் நிறைந்து ஏகமாயிருக்கும் பிரமத்தைச் சிலர் விஷ்ணுவாகவும் சிலர் சிவனாகவும் சிலர் இதரதேவதைகளாகவும் பாவித்து ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள். கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணன், "நானே சங்கரன், நானே பிரம்மா, நானே விஷ்ணு, நானே சூரியன், நானே வருணன், நானே இராமன், நானே நாரதர், நானே கபிலர், நானே சிம்மம், நானே ஐராவதம், நானே உயர்ந்த இந்திரன் குதிரை, நானே கருடன், நானே ஆதிசேஷன், நானே மகம்மேரு பர்வதம், நானே கங்காநதி, நானே பூஜ்ஜியமான அரசமரம், நானே வாயு, இலட்சுமியும், கீர்த்தியும், வாக்கும், ஸ்மிருதியும் நானே, ஓம் என்னும் பிரணவமும் நானே, ஸாமவேதமும் நானே, காயத்திரியும் நானே, சகலப்பிராணிகளையும் சம்ஹாரஞ்செய்யும் யமனும் நானே, சிருஷ்டிக்கப்படும் பதார்த்தங்களின் ஆதிமத்தியாந்தமும் நானே." என்று கூறியிருக்கிறார். திரிமூர்த்திகள் முதல் பிருதிவி வரைக்குமுள்ள சித்துராசிகளிலும் சடராசிகளிலும் முக்கியமான ஒவ்வொன்றையெடுத்து அதை நான்தான் நான்தான் என்று பகவான் கூறினதால், அண்டபிண்டங்களிலுள்ள சகலமும் பகவானேயென்று ஏற்படவில்லையா? நான் பிரம்மா, நான் விஷ்ணு, நான் சங்கரன் என்று கூறிய அவர்யார்? திரிமூர்த்திகளைக் காட்டிலும் அவர் மேம்பட்டவரா யல்லவோ யிருக்கவேண்டும். திரிமூர்த்திகளைக் காட்டிலும் மேற்பட்டது பிரம்மமன்றோ? ஆதலால் எல்லாவற்றையும் நான் நான் என்று கூறிய ஸ்ரீகிருஷ்ணபகவான் பிரம்மமன்றோ? இதனால் எல்லாவற்றிலும் நிறைந்திருப்பது பிரம்மம் என்று ஏற்படவில்லையா? இந்தக்காரணத்தால் எந்தமூர்த்தியை யானாலும் அல்லது எந்த தேவதையையானாலும் பூஜித்தால் பரப்பிரமத்தைப் பூஜித்ததாகுமன்றோ? அப்படியே எந்தமூர்த்தியை அல்லது எந்ததேவதையை நிந்தித்தாலும் எங்கும் பரிபூரணமான பரப்பிரம்மத்தை நிந்தித்ததாகுமல்லவா? ஆரிய அன்பர்களே! நமது இந்துமதவேதத்திலும், உபநிஷத்திலும், மகரிஷிகளின் வாக்கியங்களிலும், புராணங்களிலும் நம்பிக்கையுள்ளவர்கள் கீதையில் கூறியிருக்கும் பகவான்வாக்கியத்தையும் நம்பவேண்டியது அவசியமன்றோ? கீதையில் மேற்கூறியபகவான் வாக்கியத்தை நம்புவது உண்மையாயிருந்தால் ஏன் ஒருவர் பிறர்மதத்தையும் தேவதையையும் நிந்திக்கவேண்டும்? ஏன் ஒரு வைஷ்ணவர் சைவரை தூஷிக்கவேண்டும்? ஏன் சைவர்கள் அன்னியமதஸ்தர்களைப் பழிக்கவேண்டும்? ஏன் ஒருமனிதன் மற்றொருமனிதனை பகைக்கவேண்டும்? ஏன் ஜீவஹிம்சை செய்யவேண்டும்? ஏன் பட்சபாதமிருக்கவேண்டும்? ஏன் மோசம் திருடு இவைகள் நடந்தேறவேண்டும்? ஏன் ஒருவரிடத்துப் பிரியமும் மற்றொருவரிடத்து வெறுப்பும் காண்பிக்கவேண்டும்? கீதையைப்படித்து உண்மைதெளிந்தது வாஸ்தவமானால் பிரம்மமயமாயிருக்கும் உலகிலுள்ள எல்லாஜீவர்களை சமமாய்ப்பார்க்க வேண்டாமோ? கீதையைப்படிப்பதால் என்னபயன்? படித்தவண்ணம் அனுஷ்டிக்காவிடில் படித்ததின் பிரயோசனம் என்னே! கீதையைப் படித்து அதன்படிநடக்க வல்ல மனிதன் மததூஷணை, தெய்வநிந்தனை இவைகளைவிடுத்து சர்வ ஜீவராசிகளையும் சமமாய்ப்பார்த்து, தெய்வம் ஒன்றேயெனம்பி துதித்து, உலகில் எவ்வளவு வித்தியாசங்கள் தோன்றினும் அவைகளெல்லாம் அவ்வொரு பகவானுடைய சொரூபமே பலவிதமாய்க் காணப்படுகின்றது என நன்குமதித்து எல்லாவற்றையுங் கடவுளாகவே பாவித்து உள்ளன்புடன் பக்திசெய்து, சதா சந்துஷ்டனாய் நித்யமுக்தனாயிருப்பான். இது திண்ணம்.

முன்னொருகாலத்தில் கபீர்தாஸ் என்னும் மகாபக்தர்தாம் உண்பதற்காக ரொட்டியுடன் வெண்ணெயும் சர்க்கரையும் வைத்திருந்தார். அவர் உண்பதற்கு உட்காருந்தருணத்தில் ஒரு நாய் அங்கு ஓடிவந்து ரொட்டித்துண்டை வாயில் கவ்விக்கொண்டோடிற்று. அதைக்கண்ட கபீர்தாஸ் கையில் வெண்ணெயும் சர்க்கரையும் எடுத்துக்கொண்டு நாயின் பின் வேகமாய் ஓடி, "பகவானே! ரொட்டிமட்டும் சாப்பிட்டால் ருசியாயிராது. வெண்ணெயும் சர்க்கரையும் சேர்த்து சாப்பிடவேண்டும். ஆதலின் சுவாமி இதோ வெண்ணெயும் சர்க்கரையுமிருக்கிறது ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று நாயைக் கெஞ்சினார். மகா ஞானி யாகிய கபீர்தாஸருக்கு சுணங்கனே ஈசுவரனாகத்தோற்றியது. அம்மாதிரி பக்தியை பகவானிடத்து நாம் கொண்டாலன்றோ கீதையிற் சொல்லியதை நம்பி நடப்பதற் கடையாளம். இம்மாதிரி பக்தியைத்தான் பரபக்தியென்று சொல்லப்படும். ஓர் வித்தியாசமின்றி சகலத்தையும் ஈசுவரனாகப்பார்த்து மகிழ்வதுவே பரபக்தியாம். மற்றவை அபரபக்தியாம். அபரபக்தியானது தாழ்ந்தது. பிள்ளைவேண்டும், பணம் வேண்டுமெனக் கேட்பதும், கேட்டவை கிடைத்தால் பகவானுக்குப் பிரார்த்தனை செலுத்துகிறதும், கிடைக்காவிட்டால் தெய்வத்தை நோவதும் அபரபக்தியேயாம். இதைக் கருத்தில்வைத்துக்கொண்டுதான், "வா

யார வுண்டபேர் வாழ்த்துவதும் நொந்தபேர் வைவதுமெங்க ளுலகவாய்ப்பாடே’ என்று நமது தாயுமானார் கூறினார்.

## அருமையான விஷயங்கள்.

ஒரு கிரகம் அல்லது வீடு கட்டவேண்டுமானால் முதலில் வீடுவேண்டு மென்னும் ஆசை மனிதனுக்கிருக்கவேண்டும். நல்லவீடாய்க் கட்டுவதற்குத் தகுந்த புத்தியும் யுக்தியும் வேண்டும். பிறகு அதைக்கட்டி முடிக்கப் போதுமானவேலைசெய்தல் அவசியம். அதன்பின்பு அவ்வீட்டிற் சென்றிருந்து அனுபவிக்கவேண்டும். உலகத்தில் சாதாரணமாய் மண், கல், சுண்ணாம்பு முதலானவைகளைக்கொண்டு கட்டப்படும் வீட்டையடைய ஆசை அல்லது பிரியம், புத்தி அல்லது அறிவு, வேலை அல்லது கர்மம் இம்மூன்றும் வேண்டுமானால், சுகமயமான பேரின்பவீட்டை அல்லது மோக்ஷ சாம்பிராச்சியத்தை யடைய பக்தி, ஞானம், கர்மம் ஆகிய மூன்றும் அவசியம் வேண்டியது. இப்படியிருக்க சிலர் கர்மமார்க்கமே முக்கியமென்றும், சிலர் ஞானந்தான் சிரேஷ்டமெனவும், சிலர் பக்தியிருந்தாற் போதுமானதென்றும் கூறுவது நியாயமன்று. ஒருவனுக்கு சரியானபக்தி இருந்தால் அவன் கர்மம் ஞானமாகிய இரண்டும் தனக்கு அவசியம் வேண்டியதென்றே அறிவான். ஞானமில்லாதபக்தி மூடபக்தியல்லவோ? ஒருவனுக்கு உண்மையில் ஞானமிருந்தால் அவன் பகவானிடத்த பக்திசெய்யாமற் போவனோ? நிசமான கர்மகாண்டிக்கு பகவானையறிய ஞானமும் அவரிடத்துப் பக்தியுமில்லாமல் அவன் செய்யுங் கர்மத்தால் பயனென்னவோ?

* * *

“இருந்தால் அதிகப் பணக்காரனாயிருக்கவேண்டும் இல்லாவிட்டால் ஒன்று மில்லாமல் தரித்திரனாயிருக்கவேண்டும். நினைத்ததையனுபவிக்க அதிகப்பணமில்லாமலும் ஒருவரையடுத்துபிச்சைவாங்க தரித்திரனுமிராமல் நடுத்தரமாயிருப்பது மிகவும் கஷ்டம் என்று அநேகர் கூறுகிறார்கள். அது சரியன்று. அதிகப்பணமிருந்தாலும் கஷ்டம், தரித்திரனாயிருந்தாலும் கஷ்டமே. நடுநிலையிலிருப்பதுதான் சிரேஷ்டம். எப்படியெனில் அதிகப்பணமிருந்தால் அகங்காரம் மமகாரம் இவைகளதிகமுண்டாகி மனம்போனவழிசென்று துர்நடத்தைகள் ஏற்பட்டு சிலர் கெடுகிறார்கள். சிலர் கெட்டவழிகளில் பிரவேசிக்காவிட்டாலும் அப்பணத்தைக் காப்பாற்றுவதிலும் அதை விர்த்திசெய்வதிலுமே அதிககாலஞ்சென்று பணப்பயித்தியமே பிடித்து தன்னையுந் தனக்கு ஆதாரத்தலைவனையுமாராய்ந்தறிய வகையிலாது அவர்கள் வாழ்நாளை வீணாளாக்குகிறார்கள். தரித்திரனாயிருந்தால் எப்போதும் வயிற்றுக்கு அன்னந் தேடுவதிலேயே காலஞ்சென்று ஏக்கமதிகரித்து பகவானையறியவும் அறிந்து பக்திசெய்யவும் முடியாமல் காலத்தைப் போக்க வேண்டியதாயிருக்கிறது. செல்வமும் தரித்திரமும் இல்லாமல் நடுநிலைமையிலிருந்தால் மேற்கூறிய குற்றங்களில்லாமல் ஒருவன் சம்சார சம்ரக்ஷணார்த்தம் அதிககாலம் செலவழிக்காமல் அதற்காக அதிககஷ்டமும் படாமல் உலகத்தில் அதிக போராட்டமுமில்லாமல் மதவிஷயத்தை யாராயப்புகுந்து தெய்வபக்தி, ஞானம் இவைகளுண்டாகி சன்மார்க்கத்தை யனுசரிக்க முடியும். எதிலும் நடுநிலைமையே உத்தமம். இதனுண்மையை உலகத்தில் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கலாம். தானம், தயை, கடவுளிடத்துப்பக்தி, பூஜை, விரதம், தவம், மதவாராய்ச்சி இவைகளெல்லாம் பெரும்பாலும் நடுநிலையிலுள்ளவரிடத்தே காணப்படுகின்றனவேயல்லாமல் தரித்திரரிடத்திலும் அதிக தனவானிடத்திலும் காணப்படுவதில்லை.

* * *

நம்மாலாகாதது ஒன்று உண்டோவென சிலர் உலகவியாபாரங்களைச் செய்யப்புகுந்து பணத்தைச் செலவழித்து தேககஷ்டமும்பெற்று கோரியகாரியம் முடியாமற்போனால் துக்கித்து மனம்வருந்தி பிறகு கடவுளின்செயல் இவ்வாறிருந்தால் நாமென்ன செய்வோமென ஒருவாறு தேறுதலையடைகிறார்கள். கோரியகாரியம் தாங்கள்நினைத்தவண்ணம் முடிந்துவிட்டால் அதிக சந்தோஷமடைந்து தங்களாலாகாதது ஒன்றுமேயில்லையென்னும் சித்தாந்தத்தைத் திடப்படுத்திக்கொள்ளுகிறார்களேயொழிய கடவுளருளால் நடந்தேறியதென நினைப்பதில்லை. காரியம் முடியாவிட்டால் அது கடவுளின் செயலென்றும் காரியம்முடிந்தால் நமது செயலென்றும் எண்ணலாமோ? காரியமாதலும் ஆகாது போதலும் இரண்டும் நம்முடையதாயிருக்கவேண்டும் அல்லது இரண்டும் கடவுளுடையதாயிருக்கவேண்டும். காரியஜெயம் நமதென்று அபிமானித்தால் நமக்குமேன்மேலும் அகங்காரம் விர்த்தியாகிறது. இது மிகவும் கெட்டது. காரியநஷ்டம் நமதென்று அபிமானித்தால் நமக்கு அதிகதுக்கம் உண்டாகிறது. ஆகையால் நாம் ஒரு காரியத்தைச்செய்ய வாரம்பிக்குமுன்னமே கடவுள் சித்தம்போல் நடக்கட்டுமென எண்ணிச் செய்தோமானால் காரியம் முடிந்தால் பகவானது அருளால்முடிந்ததெனவும் முடியாவிட்டால் பகவானது சித்த மிவ்வாறிருந்ததென்வும் எண்ணினால் நமக்கு அகங்காரமு

மில்லை துக்கமுமில்லை. இதுவே கர்மயோகத்தின் இரகசியமும் பக்தியோகத்தின்லாபமும் ஞானயோகத்தின் பெருமையும்.

* * *

அபிமானமே துக்கத்திற்குக் காரணம். அபிமானமே பிறப்பிறப்புக்குக் காரணம். இவ்வபிமானம் விட்டால் துக்கமில்லை ஜனனமரணமில்லை. இதுவேமோக்ஷமாம். அபிமானம் எதனால் நீங்கும்? நாம் எதனிடத்து அபிமானம் வைக்கிறோமோ அவ்வஸ்துவின் உண்மை சொரூபத்தை விசாரணைசெய்வதால் நீங்கும்.

* * *

“சூக்ஷமத்திலிருப்பது மோக்ஷம்.” இது உண்மையே. மோக்ஷத்தையடைவது கஷ்டமன்று, அது பெருங்காரியமன்று. அதற்குத் தனம் வேண்டியதில்லை மனிதர் ஒத்தாசை வேண்டியதில்லை. அது நம்மாலாகத் தகுந்த ஓர் சுலபமான காரியம். அதென்னவெனில்? எந்தவஸ்துவிலும் நாம் அபிமானம் வைக்காமலிருந்துவிடுதல்தான். யோசித்துப்பாருங்கள். நான் என்பது ஓர் அபிமானம் என்தேகம் என்பது மற்றோர் பலமான அபிமானம், என்வீடு, என் பெண்டாட்டி, என் பிள்ளை என்பது பல சன்மங்களைக் கொடுக்கிற அதிகபலமான அபிமானங்கள்,

* * *

கடவுள் உண்டா இல்லையாவென ஆசங்கிக்கவேண்டாம். களவுளைத் தேடுமுன் நம்மைத்தேடுவோம். எடுத்ததற்கெல்லாம் நாம் நாம் என்று சொல்லிக்கொண்டு நாம் யார் என்றால் மிரள மிரள விழித்துக்கொண்டிருக்கிறவர்கள் அகண்டமாய் எங்குமளாவி ஏகமயமாயிருக்கும் அற்புதக்கடவுளை அறிவது கஷ்டமானதால் முதலில் நாம் யார் என்று தெரிந்து பிறகு கடவுள் உண்டா இல்லையாவென ஆராய்வோம். ஓர் பெரிய நெல்லம்பாரத்தை அளக்கப்புகுந்த மனிதன்தான் எடுத்து அளக்கப்புகுந்த பாத்திரத்தின் அளவு இவ்வளவென்று தெரிந்துகொள்ளாதிருந்தால் அவன் அம்பாரத்தின் அளவு இவ்வளவென்று எப்படிகணக்கிடுவான்? அதுபோல் கடவுளை யாராயப்புகுமுன் ஆராயப்புகுந்த சீவனது அளவு இவ்வளவென்று தெரிந்துகொள்ளுதல் அவசியம்.

* * *

உலகத்தில் சுகமடைய வேண்டுமென்று எண்ணி பல் வழிகளில் பிரயத்தனஞ்செய்து கோரிய சுகத்தையடைந்த பின்னும் அதில் திருப்திகொள்ளாமல் மேன்மேலும் சுகத்தை விரும்பியோடி யுழலுவதே மாயை. தினந்தோறும் ஜனங்கள் இறப்பதைக்கண்டும் அநேகர் நாம் இறக்கப்போகிறதில்லையென்று நினைத்து அநேக வருஷங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறார்கள். இதுதான் மாயையின்காரியம். உலகத்தில் எத்தனை தரம் துன்பத்தி லடிபட்டாலும் இவ்வுலகத்திலேயேயிருந்து வாழவேண்டுமென்று மனிதர்கள் எண்ணுகிறார்கள். இதுவும் மாயையின் மயக்கு. மனிதர்கள் தங்களிடத்திருக்கும் குற்றத்தைக் குணமாகக்கண்டு பிறர் குணத்தை குற்றமாகப்பார்க்கிறார்கள். இதுவும் மாயையின் பிரபாவமே. பிள்ளை எவ்வளவு துஷ்டனாயும் மந்தனாயுமிருந்தாலும் தகப்பன் தன் பிள்ளையே சர்வசுகுண சம்பன்னன் மகா புத்திசாலியென்று மூட அபிமானத்தால் பெருமையாகப் பேசுகிறான். இதுவும் மாயையே. தனக்கென்றால் ஒரு நியாயம் பிறர்க்கென்றால் வேறொரு நியாயமென்று சொல்லுவதும் மாயையே.

* * *

கடவுள் உண்டாவெனின் சிலர் இல்லையென்று நாஸ்திகவாதஞ் செய்வார்கள். உலகம் உண்டாவெனின் பலர் உண்டென்றும் சிலர் இல்லையென்றும் வாதிக்கத் தொடங்குவார்கள். பிரம்மம் உண்டாவெனின் அதைக் கண்டதுயார்? என்று சிலர் கேட்பார்கள். ஆனால் ஒவ்வொருமனிதனும் தானுண்டா வென்பதைப்பற்றி சந்தேகிப்பதில்லை. ஆதலால் எது நிச்சயமென்று ஒவ்வொருவரும் நம்புகிறார்களோ அதை முதலில் விசாரிக்கவேண்டுமென்று ஜகத்குருவாகிய ஆதிசங்கராசாரியார் ஆத்மவிசாரணை செய்யுமாறு போதித்திருக்கிறார். உலகத்தில் புத்திமானாயிருப்பவன்தான் யார் என்று ஆத்மவிசாரணைசெய்ய வாரம்பிக்கவேண்டும். ஆத்மா இன்னதென்றும் அனாத்மா இன்னதென்றும் நன்றாய் அறியவேண்டும். நான் என்பது தேகத்தைக் குறிக்கவில்லை ஆத்மாவையே குறிக்கிறதென்று ஒவ்வொருவரும் உணர்ந்து அனாத்மாவாகிய தேகத்தில் அபிமானங்கொள்ளாமல் ஆத்மாவை நாடவேண்டும். ஒருவன் தன்னை விசாரியாமல் அயலிலுள்ளதை விசாரிக்கப்புகுதல் அனாவசியம். தன்னையறிந்தால் எல்லாவற்றையும் அறிந்ததாகும். தானென்பதல்லாத பொருளிடங் காவுமில்லை, ஆயினும் தனக்கிடமெங்கேயென்று கேட்டால் ஆகாயம்போலத் தனக்குத்தானேயன்றி வேறிடம் எங்கணுமில்லை.

## சுகுணவீர சர்மா நாடகம்.

### கதாபுருஷர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | குணோத்தமர் | கலிங்கதேசமன்னர் |
| 2. | சுந்தரர் | கலிங்கசேனாதிபதி |
| 3. | கதாயுதன் | இதர 2 சேனைத்தலைவர்கள் |
| 4. | வில்வலன் | |
| 5. | நயமொழி | சமரதி |
| 6. | வீரசர்மா | கொற்கையரசர் |
| 7. | விஜயமார்த்தாண்டபூபதி | திருவனந்தபுரத்தரசர் |
| 8. | சுகுணம் | வீரசர்மாவின்மனைவி |
| 9. | கேசினி | சுகுணத்தின்உற்றதோழி |
| 10. | மாதுபுவனி | சுகுணத்தின்நற்றாய் |
| | வேறு 2 தாதிமார் | |
| | குருதாசயோகி | |
| | நடாதிபர் | |
| | விகடன் | |

கொற்கைநகரவாசிகள், யுத்தவீரர்கள், வாயில்காவலர், சேவகர்முதலியோர்.

களம் அல்லது இடம். கொற்கை நகருக்கருகிலுள்ள படைவீட்டிலும், கொற்கைநகரிலும், அனந்தபுரத்திலும் பொருநையாற்றங்கரையிலும்.

### முகவுரை.

நடாதிபர். பாடப்பணிதேறும்பண்பின் மனத்தகத்தி
னேடத்தனிமுதலாய் நின்றிலங்கும்-கூடன்மற்
றெத்தலத்துமோங்கு மெழிற்பரமனாருண்ட
சித்திக்கணநாதன் சீர்.

விகடன். (நுழைந்து) ஐயா, யாதுகாரணம் பற்றிக்கடவுள் வணக்கஞ்செய்தீர் இங்கேதாவது நடைபெறுமோ இப்போது?

நடாதிபர். பொதுவாக விநாயகருடையபிரபாவங்களைச் சொல்லியதே ஒழிய வேறில்லை.

விகடன். தெய்வவணக்கஞ்செய்த அடுத்த நிமிஷமே பொய்தானா பேசுகிறது. நும் குணிலைகள்நீர் செய்யப்புகும் காரியத்தை வெளியிடுகின்றனவே. யாரையோ விரும்பி அவர்வரவை எதிர்பார்க்கிறவர் போன்றும் உம்முகக்குறிகள் வெளியாக்குகின்றன.

நடாதிபர். அஃதிருக்கட்டும் நீயார் மெத்தத் துணிகரமாய் அரங்கின் கண்ணேறி அதிகம் வாதாடுகிறாய்.

விகடன். என்ன ஐயா! யான் கேட்டதற்கு சமாதானம் ஒன்றும் இல்லாமல் நீர்கேட்பதற்கு விடை கூறுவனோ?

நடாதிபர். நீயாரென எனக்குச் சொல்லாயோ? (சற்று கோபத்தோடு.)

விகடன். இவர் தொனியினால் நம்மை வாயிலோனை அழைத்து வெளியில் துரத்திவிடுவார் எனத் தோற்றுகிறது. நான் நினைத்துவந்தகாரியம் நிறைவேறுவதற்குத் தக்க அமையம் இப்போது இயைந்தது. என்னை இவரிடத்தே அறிவித்துக் கொள்வேன், யாரென்வா என்னை வினாயினீர்? என்னைக்காணில் உமக்கு எப்படித் தோற்றுகிறது?

நடாதிபர். நின் உடையினால் என்னிளமையில் யான் கண்டுள்ள தையற்பரதேசிபோலும், வாக்கினால் மெத்த வாயடிக்கையன்போலும் தோற்றுகிறாய்.

விகடன். நீர் அறைந்தது முற்றும் சரியே, யான் என் பெரும் பிதா மகர்தொட்டு வம்ச பரம்பரையாய்வந்த விகடர்களின் சந்ததியான்; என ஆற்றலை யானே கூறப்புகின் 'நீர்பெய்து தீவளர்த்தற்றாம்' ஆதலின் என் நாமம் அகட சகட விகடப் பிரதாப மகாதீர ராஜேந்திர விகடன் என்பதைமாத்திரம் கூறி முடிக்கிறேன்.

நடாதிபர். மெத்தசந்தோஷம். நான் கணநாதனை ஸ்மரித்தகாரணம் இஃதே. அது யாதோரிடையூறின்றி நிறைவேறியது, இங்கிருந்து நடர்களின் கருமங்களை நோக்கி சபையோரையுவகைபெறச்செய் (போகிறார்.)

### 1. அங்கம்.

களம் 1. கொற்கை நகரவீதி.

காலம்-வைகறை.

2 நகரவாசிகள்.

தீர்க்கலோசனன். கடவுள் நின்னைக் கடாக்ஷிப்பாராக! ஏது இத்துணை அதிகாலையில் நீரும் படுக்கை விட்டெழுந் துலாவுதல்!

உற்றதுரைப்போன். இரவில்நடந்த மேககோஷங்களையும் மின்னலின் வன்மையையும் அறியீரோ! அம்மின்னலால் அதிகதீமை இந்த நகருக்கு நேரிட்டிருக்கு என்று எண்ணி வீதிவலம் வந்தபோது மேல் அகரத்தில் அந்தண



161190
Rm 211, N031

ரில்லம் பல அழிந்து கிடந்தன. மற்றவையைப்பற்றி இன்னும் ஒன்றுந்தெரியவில்லை.

தீர்க்கலோ. ஆம், இரவில் எழு முகில்களும் தலையவிழ்ந்து கொட்டியதுபோ லன்றோ தோற்றியது. அன்றியும் யானும் வேறு சில திய சகுனங்களைக் கண்டேன். அவை என் மனத்தினின்றும் அகலாமல் துன்புறுத்துகின்றன.

உற்றதுரை. அவையாவை? பகர்க.

தீர்க்கலோ. யாமத்தில் மழையின் வன்மைச் சற்றுக் குறைந்து சிறு தூற்றலாய் நீர்த்துளிகள் விழுந்துகொண்டிருந்தபோது எனக்குத் தூக்கம் வராததனால் என் மேன்மாடத்தில் ஏறி நின்று உலாவினேன். அப்போது கோபுரமாடங்களில் கூகைகள் கர்ணகடோரமாகக் கூவின. இதனால்யாது நேருமோ என்று ஐயமுற்று நின்றபோது நகரத்தின் மதிற்சுவர்களில்நான்குவாயிலுக் கருகிலும் குலைந்த ஆடையோடும் விரிந்த கூந்தலோடும் ஒரு பெண் நின்று அழுத குரல் என்செவியைத் துளைத்தன. இக்குறிகளை நோக்குமிடத்து யாதோ நகருக்குத் தீங்குநேருமென்று எண்ணவேண்டியிருக்கிறது.

விகடன். இவை ஒருவித சடங்கள். அறிவுதங்கிய ஊரிலேயே குடியிருந்து அறியாதவர்கள். "கோட்டான் கத்தினதாம் மதிலுறுப்பிற் பெண்கரைந்தாளாம்" மனத்தோற்றத்தால் மருண்டலையும் பேய்கள். மேல்கூறுவதைக்கேட்போம்.

உற்றதுரை. ஆம். நீ சொல்வது நம்பத்தக்கதா யிருக்கிறது. கலிங்கநாட்டு மன்னர் இரவில் பத்துமணிக்கு மேல் ஊருக் கருகில் வந்து கூடாரம் அடித்திருக்கிறதாகக் கேள்வியுற்றேன். நம் அரசராகிய வீரசர்மரோ செம்பியன் ஏவல் தலைக்கொண்டு கேரளமன்னர் பாற்சென்றிருக்கிறார். நம் நகரத்துக்கு என்ன தீங்குறுமோ.

தீர்க்கலோ. என்ன முடிவாகிறதோ பார்ப்போம். நாம் எல்லோரும் காலமாகிய கடலில் அலையுந் துரும்புகள். சுழிக்குந்தனையும் உள்ளாழ்ந்து பின் மிதக்கவேண்டியவர்கள் தானே.

உற்றதுரை. ஆம். கலிவலியைத் தடுக்கவல்லவர்யாவர். வசிஷ்டரென்ற பிரம இருஷிச் சிரேஷ்டரும் கலிவலிக்குள்ளானா ரென்னில் மற்றென்ன?

தீர்க்கலோ. என்ன? வசிட்டர் கலிவலிக்குள்ளானாரா! அக்கதையைச் சொல்லுங் கேட்போம்.

உற்றதுரை. மனிதராய்ப் பிறந்தோரெல்லாருக்கும் நவக்கிரக திசைகளும் உண்டு. அக்கிரகங்களில் சனி ஒருவனாதலால் அவன் எவனையும் பீடிக்காது விடான். ஆகையால் ஒருநாள் சனி வசிஷ்டரிடம்வந்து "குருதிசையோ அந்தியமாகப்போகிறது என்னுடைய காலம் சமீபித்து விட்டது" என்று சொல்ல.

தீர்க்கலோ. கலிநேரில்வந்துகேட்கும் வழக்கமுளதோ?

உற்றதுரை. சாமானியரிடத்தில் நேரில் பேசான். அவர் மகானோ இல்லையோ! அஃதிருக்கட்டும் மேலேகேள்-இருவரும் நெடுநேரம் வாதாடிகலியின் உறுதியானபிடியை அறிந்து, வசிஷ்டர் அரையாமப்பொழுது தன்னைப்பிடித்து விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவே, அவனும் இவர்மன்றாடலுக்குச் சம்மதித்து, ஒருநாள் குறித்துச்சென்றான். பிறகு வசிஷ்டர் ஒருயோசனைசெய்து ஒருமலை உச்சியிலுள்ள முழையில் நுழைந்துகொண்டு தானிருக்குமிடந் தெரியாதபடி நன்றாய் மூடிக்கொண்டார்.

தீர்க்கலோ. பின் என்ன நேர்ந்தது?

உற்றதுரை. அம்மலைக்கு மூன்றேமுக்கால் நாழிவழி தூரத்திலுள்ள ஓரரசன் மனையாள், மஞ்சனச்சாலையில் தன் ஆபரணங்களைக் களைந்துவைத்துவிட்டு நீராடுகையில், சனி தன் வாகனத்தை விளித்து, அவள் அணிந்திருந்த பொன்மாலையை முழைக்கருகில் போடும்படி ஆக்கியாபித்துத் தான் அவள் மனதில் புகுந்துகொண்டான். இராணி நீராடிக் கரையேறிப் பார்க்கையில் மாலை காணாதுவருந்தி, மாலை திருடிய கள்வனைக் கொணர்ந்தா லல்லது உண்ணேன் என சபதமிட்டாள்.

தீர்க்கலோ. சரி இனி வசிட்டருக்குப் பிடித்தது சனி.

**உற்றதுரை.** உடனே சேவகர்கள் பலதிக்கிலும் தேடத் தலைப்பட்டார்கள். சனியின்வலியினால்மலை முழைக்குச் செல்லும் சிறுவழியொன்று தோன்ற அவ்வழியே சிலர் சென்றார்கள், ஐந்துமைல்தூரஞ் சென்றபின் ஒருமலையுச்சியில் அந்த நகை கிடப்பதைக்கண்டு, மோசம் ஏதோ நடந்திருக்கிறதென்று எண்ணி, நாலுதிக்கிலும் அங்கேதேட வசிஷ்டருள்ள இடத்தைக்கண்டு, அத்தாடி வாலாவே அத்தொழில் செய்தவனென்று நிச்சயித்து,

**திர்க்கலோ.** ஐயோ! இனி இத்தீயர் வசிஷ்டரை என்னசெய்வார்களோ!

**உற்றதுரை.** சடையைப்பற்றி வெளிக் கொணர்ந்து, உதைத்தும் குத்தியும் அடித்தும் மற்றும் பற்பல துன்பங்களும் இழைத்தவண்ணமாகவே, அரசன் அவைக்களத்துக்குத் தள்ளி வந்தார்கள்.

**விகடன்.** வசிஷ்டர்தான் தவச்சிரேட்ட ராயிற்றே. அவர் முழையிற் புகக் காரணமென்ன. தேகாபிமானமோ என்னில் அப்படியல்ல கதைக்குக் காலுண்டோ?

**திர்க்கலோ.** என்ன முடிவாயிற்று விரைவிற் கூறும்.

**உற்றதுரை.** முடிவென்ன. அரசன் அவைக்களத்துக் கேகவும் கலிதோஷம் நீங்கினதும் உபசரிக்கப்பட்டதுமே.

**திர்க்கலோ.** ஆம் ஐய! விதிவலிகடக்க முடியாதது தான் இதனாலன்றோ.

"ஊழிற்பெருவலியா வுளமற்றொன்று
சூழினுந்தான் முந்துறும்." என்றார் செந்நாப்போதார். காலைக்கடன் கழிக்க இனி நேரமாயிற்று போவோம். எல்லாமீசன்செயல் சிந்தித்துப் பயனில்லை. (போகிறார்கள்)

**விகடன்.** சிருட்டியிலுள்ள இன்பசுகங்களையெல்லாம் அனுபவிக்கும் பேறு இல்லாதவர்களாய் விசனக்குறிகளைக் கவனித்து துயரமீக் கொள்ளும் தோன்றல்கள் இவர்கள். (போகிறான்)

(இன்னும்வரும்.)

## சம்சாரபந்தம்.

வெகுநாளைக்குமுன் தருமபுரியென்னும் ஓர் பட்டணத்தில் இராமசுவாமி யென்றொரு பிராமணனிருந்தான். அவன் சர்க்கரையினால் செய்த பக்ஷணங்களை விற்றுப் பணம் சம்பாதித்தான். அந்நகரத்திலுள்ளசிறுபிள்ளைகளெல்லாம் அவனுடைய கடையில் தின்பண்டம் வாங்குவது வழக்கம். இதனால் மிகுந்ததிரவியம் ஸம்பாதித்து குடும்பத்தைரட்சித்து மீந்த தொகையை யாருக்குந் தெரியாமல் பூமியில் புதைத்துவைத்தான். இராமசுவாமியின்காரியம் ஒருவருக்கும் தெரியாது. சிலரைப்போல் அவன் ஓட்டைவாயனன்று, தன்மனைவியினிடம் கூட தனக்கு இவ்வளவு சொத்து இருக்கிறதென்பதைச் சொல்லமாட்டான். இவனுக்கு இரண்டு குமாரர்கள் உண்டு. ஒருவனுக்கு 10-வயது இன்னொருவனுக்கு வயது-8. இவ்வாறு சிரமமின்றிவாழ்ந்து வருகையில், "தரித்திரனுக்கு திரவியம் அகப்பட்டது" போல் இராமசுவாமியின் கடைக்கு ஓர் சாதுவந்தார். அப்போது உஷ்ணகாலமாதலின் இராமசுவாமி அந்த சாதுவை உபசரித்து கடைக்குள்ளே ஓர் ஆசனம்போட்டு அதில் உட்கார்ந்து கொஞ்சநேரம் இளைப்பாறும்படி வேண்டினான். அவ்வாறே சாது உட்கார்ந்தபிறகு இராமசுவாமி வெகு பயபக்தியுடன் அவரைநோக்கி "சுவாமி தங்களுக்கு வேண்டியதென்ன"? வென, சாது ஒருபாத்திரத்தில் ஜலம் கொண்டுவாவென்றார். அவ்வாறே இராமசுவாமி கொண்டுவந்து கொடுக்க சாது அதை யுட்கொண்டு களைதீர்ந்து அவ்விடத்தைவிட்டு அகன்றுபோனார். மறுநாள் காலையில், இராமசுவாமியின் கடைக்கு ஷை சன்னியாசி மறுபடியும் விஜயம்செய்து அவனைநோக்கி தம்முடைய கிழிந்த உடுப்புகளைத்தைத்துத் தரும்படிகேட்டார். அவன் அவ்வாறே மூன்று மணிநேரம் உட்கார்ந்து ஒவ்வொரு பொத்தலாய்த்தைத்து உடுப்பை உருப்படியாக்கினான். அன்றிரவு அப்பெரியவர் கொசுக்களின் உபத்திரவமின்றி பிரம்மானந்தமாக நித்திரைசெய்தார். பக்ஷணக் கடைக்காரன்மேல் அவருக்கு பக்ஷம் உண்டாயிற்று. ஆதலின் அடுத்த நாளையில் அவனுக்கு சொர்க்காதிபோகங்களை அளிக்க வேண்டி அவனிடம் வந்தார்.

பிராமணன் ஞானியை நோக்கி "மகாராஜாவே' சொர்க்காதிபோகங்களை அடைவதைவிட மேலான சுகமொன்று மில்லை. ஆயினும் அதிபால்யர்களாயிருக்கும் என் பிள்ளைகளுக்கு கல்யாணமானவுடன் நான் தங்களுடன் புறப்பட்டு வருகிறேன். ஆதலின் 8 - வருஷம் கழித்து இங்கேவாருங்கள்" என்றான். அவ்வாறே ஆக

ட்டுமென்று சாது போய்விட்டார். சரியாக எட்டுவருஷம் ஆனவுடன் சாது மறுபடியும் வந்தார். அப்போது அவனுடைய கடை எடுபட்டு வீடு இடிந்துகிடந்தது. அதைப்பார்த்து சாது "என்னடா இராமசுவாமி இப்பொழுதாவது சொர்க்கத்திற்கு வருகிறயா" என்றார், அதற்கு அவன் "சுவாமி, என் பிள்ளைகள் சர்வமூடர்கள், அவர்களுக்கு ஏதாவது ஒருவியாபாரத்தையேற்படுத்தி கடனில்லாமல் நாலுகாசுகையிலேறும்படி பிரயத்தினம் செய்து பிறகு வருகிறேன். தயைசெய்து இன்னும் 8-வருஷம் கழித்துவாருங்கள்" என்றான்.

சாது இராமசுவாமியின் வார்த்தைகளைக்கேட்டு அவ்வாறே ஆகட்டுமென்று பொறுமையுடன் போய்விட்டார். பிறகு 8-வருஷம் கழித்து மறுபடியும் வந்து பார்க்கையில் ஆசாமியைக்காணாமல் அவன் வீட்டுக்குள்ளேசென்று இரண்டாவது பிள்ளையிடம் அவனுடைய அப்பனைப்பற்றி விசாரித்தார். அதற்கு அவன், தன் பிதா இரண்டுவருஷங்களுககு முன் எமலோகம்போய்விட்டாரென்றான். உடனே சாது தம்முடைய ஞான திருஷ்டியினால்பார்த்து இராமசுவாமி ஓர் காளைமாடாகப் பிறந்து மூத்தகுமாரனிடம் அடங்கி ஏருழுகிறான் என்று அறிந்து, அங்கேசென்று ஒருவருமில்லாத சமயத்தில் அந்தக் காளைமாட்டின்மேல் கமண்டலதீர்த்தத்தைத்தெளித்தார். அதற்குபூர்வஞானம் உண்டாயிற்று. அப்பொழுது சாது 'அடே' இராமசுவாமி இப்போதாவது என்னுடன் தேவலோகத்திற்கு வருகிறாயா வென அவன் குருமகராஜ், தாங்கள் அடியேன்மீது வைத்துள்ள அன்புக்காக நான் நன்றிபாராட்டுகிறேன். என் பிள்ளைகள் துர்நடத்தையால் ஆஸ்திகளை துர்வினியோகம்செய்து இந்த ஒரு ஏகர் தவிர மற்ற ஸ்திதிகளை நிர்மூல மாக்கினார்கள். ஆதலின் நான் சிரமப்பட்டு இந்நிலத்தையுழுது அவர்களுக்குப் பலனைக்கொடுத்து எப்படியாவது நாலுகாசு உண்டாக்கி குடும்பத்தை முன்னுக்குக் கொண்டுவந்தபிறகு தங்களுடன் வானுலகுக்கு வந்துவிடுகிறேன் என்றான். ஞானி இராமசுவாமியின் அறிவீனத்தைக்கண்டு அவனுக்கு இனி என்ன உபதேசித்தாலும் பிரயோஜனப்படாதென்று இன்னும் இரண்டுவருஷம் கழித்துவருவதாய்ப் புகன்று போய்விட்டார். அவ்வாரே இரண்டுவருஷம் கழித்துவருகையில் இராமசுவாமியின் கடை நிலம் வீடு முதலியவைகளைக் காணாமல் அருகில் ஓர் குடிசையைக்கண்டு அதன் சமீபமாகச்சென்றார். அங்கேயிருந்த ஓர் வேட்டைநாய் இவரைவிரட்டிக் கடிக்கவந்தது. உடனே இவர்போட்ட கூச்சலைக்கேட்டு சகோதரர்களிருவரும் வெளியேவந்து நாயைப்பிடித்து கட்டினார்கள். அப்போது தயாளுவாகிய அம்மகான் அவர்களின் குடும்பக்ஷேமங்களை விசாரித்து காளைமாடு எங்கே என்றார். அவர்கள் ஐயா, காளைமாடு இறந்துபோய் இரண்டுவருஷமாகிறது. அது கொஞ்சமாய் தீனி தின்று அந்திநேரம்வரை உழைக்கும், மகாசாது, அதைப்போல் இனி காளைமாடு கிடைப்பது அரிது, அது இறந்ததுமுதல் எங்களுக்கு வியவசாயம் தொலைந்து குடும்பத்தில் கடன்பெருகி அவஸ்தைப்படுகிறோம் என்றார்கள். உடனே மகான்ஞான திருஷ்டியினால் நோக்கி காளைமாடாய்ப் பிறந்து இறந்துபோன இராமசுவாமி நாயாய்ப்பிறந்து வீட்டைக் காத்துக்கொண் டிருக்கிறானென்றும் அதனாலே தான் தன்னை விரட்டிக்கடிக்க வந்தானென்றும் கண்டுகொண்டார். ஆதலின் இரகசியமாக அந்தநாயின்மேல் கமண்டலதீர்த்தத்தைத் தெளித்தார். அதற்கு உடனே பூர்வஞானம் உண்டாயிற்று. அப்போது மகான் அடே, இராமசுவாமி இப்போதாவது என்னுடன் சொர்க்கலோகத்துக்கு வருகிறையா, வென்றார். அதற்கு அவன் 'சுவாமி, என் துக்கத்தை நான் என்னவென்று சொல்லுவேன்? மூடர்களாகிய என் பிள்ளைகள் வீடு, நிலம் கடைமுதலிய எல்லாவற்றையும்தொலைத்து இப்போது கடனாளிகளா யிருக்கின்றனர். இங்கு திருடர்பயம் அதிகம்.

"பிச்சைக்காரன் வீட்டில் சனீசுவரன் நுழைந்தது" போல் யாரேனும் திருடர்கள் உள்ளேநுழைந்து தட்டுமுட்டு சாமான்களைக்கொண்டு போகாதபடி நான் காவலாயிருக்கிறேன். ஆதலின் என்பேரில் கிருபைவைத்து இன்னும் இரண்டுவருஷம் கழித்துவாருங்கள். அப்போது தடையின்றி தங்களுடன் சொர்க்கத்திற்கு வருகிறேன் என்றான். சன்னியாசி இராமசுவாமிக்குள்ள சம்சார பந்தத்தைக்கண்டு அவ்வாறே வருவதாய் சொல்லிப்போய்விட்டார். அதன்பிறகு இரண்டுவருஷம் கழித்து சாது அவ்விடம்வந்து பார்க்கையில் வீடெல்லாம் அழிந்து தரையோடு தரையாய்ப்போய் கொஞ்சதூரத்தில் இரண்டு குடிசைகளிருந்தன. அங்கிருந்து இரண்டு சகோதரர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டு வெளியேவந்தனர். உடனே ஞானதிருஷ்டியால் நோக்கி காளைமாடாய்ப் பிறந்து இறந்த இராமசுவாமி நாயாய் ஜனித்து இறந்து இப்போது நாகப்பாம்பாகிதான் ஆதியிற் புதைத்துவைத்த தனத்தைக் காத்துக்கொண் டிருக்கிறானென்றும் சண்டையிட்டு வெளியேவந்த இருவர்களும் அவனுடைய பிள்ளைகளென்றும் அறிந்துகொண்டார். அவ்விரண்டு சகோதரர்களும் அவரைக் கண்டு இந்த சன்னியாசி நம்முடைய வீட்டில் அடிவைத்ததுமுதல் நமக்கு தரித்திரமுண்டாகத் தலைப்பட்டது. ஆதலின் இவனை விரட்டவேண்டுமென்று

(இக்கதையின்தொடர்ச்சியை 109-வது பக்கத்தில் காண்க.)

## மனோகரன்.

(முன்தொடர்ச்சி.)

இவ்வாறு சொல்லிவிட்டு சுலோசனர் சந்திரசேகர பிரபுவின் உத்திரவுபெற்றுக்கொண்டு சென்றார். சுலோசனர் என்பவர் பிரபுவமிசத்தைச் சேர்ந்தவராயினும் மிக்க இழிவான குணமுடையவர். பார்ப்பதற்கு கம்பீரமான தேகப்பருமனுடையவராய் நல்லுடையாபரணங்களை யணிந்தவராயினும் தீயமனத்தினர். நல்வார்த்தைகளைப் பேசி உதவி புரிகிறவர்போல் தோற்றினும் தன் காரியத்திலேயே கண்ணுள்ள கபடநெஞ்சினர். எவ்வளவு இரகசியமான விஷயங்களையும் பிறரிடத்துவேடிக்கையாகப் பேசி அறியும் சமர்த்தர். எவ்வளவு அற்பமான தாயினும் தன் விஷயத்தை பிறருக்கு எளிதில் காட்டாத கெட்டித்தன முள்ளவர். இத்துடன் இவர் நாற்பது வயதாகியும் கல்லியாண மில்லாமலே காமவலையிற்சிக்கி கணக்கிலா மாதர்களின் கற்பை யழித்தவர். சேலைகட்டிய எவ்வுருவையுங் கண்டு ஆவென்றுவாயைத்திறந்து கன்னம் நோவெடுக்கப் பார்த்து மனமுருகுமியல்பினர். இவர் பிரபுவமிசத்தில் பிறந்து சில ஊர்களுக்கு சொந்தக்காரராகி மிக்க தனத்தை யுடையவராதலபற்றி நற்குணமுள்ள பிரபுக்களுடைய சினேகமுண்டு. அதனாலிவர் அடைந்த பலனொன்றுமில்லை. நற்சிந்தையராகி தர்மவழியி லொழுகுவதற்கு அவருக்கு வலியின்றேனும், கொடிய பாபச்செயல்களைப்புரிய சிறிதும் அச்சமில்லாதவர். இவரது பிதா மகததேசத்திலுள்ள சிற்றரசர்களிலெல்லாம் தலைமைப்பெற்று அரசனைப்போலவே அநேக ஊர்களுக்கு அதிபதியாயிருந்தனர். அவரது காலத்திற்குப் பிறகு சுலோசனருடைய தமையன் நரேந்திரபிரபுபட்டம்பெற்று நல்லொழுக்கத்துடன் ஆனந்தபுரியில் சிலநாள் வாழ்ந்து இளம்பிராயத்திலேயே தன் மனைவியுடன் துர்மரணத்தையடைந்தனர். அக்காலத்தில் மகதவரசன் சுலோசனருடைய நடவடிக்கையைக் குறித்துக் கேள்வியுற்று நரேந்திரன் ஆண்ட ஊர்களில் அநேகம் பிடித்துக்கொண்டு சில ஊர்களைமாத்திரம் சுலோசனருக்குக் கொடுத்தான். தமையனாகிய நரேந்திரன் இறந்தபின்பு சுலோசனர் ஆனந்தபுரியில் வசிக்க இஷ்டமில்லாதவராய் சத்தியபுரிக்கு அடுத்த இரத்தினபுரியில் ஓர் சிறிய அரண்மனை கட்டிக்கொண்டு வசிக்கலுற்றார். சத்தியபுரிவசிப்பதற்கு ஆரோக்கியமான ஊரானபடியால் இரத்தினபுரியில்சில காலமும் சத்தியபுரியில் சிலகாமுமாக வசிக்கத்தலைப்பட்டார். சுலோசனரிடத்து சந்திரசேகர பிரபுவுக்கு மரியாதையுண்டு. சந்திரசேகரர் மிக்க நல்லவராதலால் சுலோசனருடைய துற்குணங்களையும் கெட்ட நடவடிக்கையும் அறியாதவர். சுலோசனர் சத்தியபுரில் வசிக்குங் காலத்தில் அடிக்கடி சந்திரசேகரரிடத்துவந்து பேசுவதுண்டு. இப்படியாக அனேக நாட்களை தன்னிஷ்டப் பிரகாரம் வீணிலே கழித்து விட்டதை நினைந்து தன் முன்னோர்களின் பெயரையும் ஊரையுங் காப்பாற்ற சந்ததி விர்த்தி செய்யும் பொருட்டு ஓர் பெண்ணை விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்று சுலோசனர்எண்ணங்கொண்டார். தனக்குப்பெண்ணைக்கொடுக்க ஏமாந்திருக்கும் பிரபு சந்திர சேகரர்தானென்று சுலோசனர் நன்றாய் அறிந்து அவரதுபெண்மீது நாட்டம்வைத்தனர். "காற்றுள்ளபோது தூற்றிக்கொள்" என்னும் பழமொழிக்கிணங்க இப்போது நல்ல சமயம் நேர்ந்தபடியால் சந்திரசேகரரிடத்து தன் னெண்ணத்தைத் தெரிவித்துப்போயினர்.

மகததேசத்திற்கு அடுத்தாப்போல் அநேகமலைகள் உண்டு. அம்மலைகளின் மத்தியில் கள்ளச்சாதியைச் சேர்ந்த ஜாதன் அஜாதன் என்னு மிரண்டுசகோதரர்கள் கோட்டையைப்போல் ஓர் பெரியவீடு கட்டிக்கொண்டு வசித்து வந்தார்கள். அவர்க ளிட்டவேலையைச் செய்ய 50 கள்ளர்கள் உண்டு. இக்கள்ளச் சாதியார் யாருடைய ஆளுகைக்கும் உட்பட்டவ ரல்லர். அம்மலைகள் அதிக உன்னதமானதாலும் அவைகளின்மீது ஏறுவதற்குச் சரியானபாதைக ளில்லாமல் நெருங்கிய முட்செடிகள் அடர்ந்ததாலும், ஒருவரும் அம்மலைகளுக்குப் போவதில்லை. இத்துடன் அம்மலைகளைச்சுற்றி நெருங்கிய காடிருந்தபடியால் அக்காட்டிலுள்ள துஷ்டமிருகங்களுக்குப் பயந்து அநேகர் வருவதில்லை. காடுகளால் சூழப்பட்டு மனுஷிய சஞ்சாரமில்லாத மலைகளின் மத்தியில் வசிக்கும் கள்ளச்சாதியார் யாவருக்கும் தெரியாதபடி இரகசியமாய் அம்மலைக்குள்ளே போகவும் நினைத்த மாத்திரத்தில் வெளியேவரவும் ஓர் வழிகண்டு பிடித்திருந்தார்கள். அவ்வழியாக இராக்காலத்தில் வெளியே வந்து ஊர்களில் பிரவேசித்து கொள்ளையடித்து சம்பாதித்த பொருள்களை யெல்லாம் தங்கள் சிருங்கமலைக் கோட்டைக்குள் பத்திரப்படுத்துவது அக்கள்ளச் சாதியாருடைய வழக்கம். அக்கோட்டையில் ஆகாரத்திற்காக ஒருவருஷத்திற்கு வேண்டிய சாமான்கள் எப்போதும் சித்தமாயிருக்கும். இரவில் அவர்கள் வெளியே ஊர்களில் வந்தால் சூரியன் உதயமாகுமுன்னமே தங்கள் சிருங்கமலைக் கோட்டைக்குப்போய்ச் சேர்வார்கள். ஒருவேளை பொழுதுவிடிந்து விட்டால் அவர்கள் தங்கள் மலைக்குப்போகாமல் ஊர்களிலேயே சஞ்சரித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களில்முக்கியர்களானஜாதன்

அஜாதன் என்னும் சகோதரர்கள். பகற்காலத்தில் ஊர்களில் தங்கும்படி நேர்ந்தால் அவர்கள் பெரிய பிரபுக்களைப்போல் நல்ல ஆடையைத்தரித்து ஆபரணங்களையணிந்து வெளிதேசத்திலிருந்து யாத்திரை வந்தவர்களைப்போல் நடித்துத்திரிவார்கள். அந்தகாலங்களில் சிலபிரபுக்கள் வீட்டில்போய் தங்குவதுமுண்டு. அக்காலத்தில் இவர்களைக் கள்ளர்களென்று யாரும் கண்டுபிடிக்க முடியாது. சிருங்கமலைக் கடுத்தாப்போலிருக்கும் தேசங்களில் அநேகர் எவ்வளவோ பணங்களைக் கொள்ளை கொடுத்தும் கொள்ளையாடிய திருடர்கள்இன்னாரென்று கண்டுபிடிக்க அவர்களுக்கு வலியில்லை. ஆனால் அவ்வூர்களில் கொள்ளையடிக்கத் திருடர்களுண்டு என்பதுமாத்திரம் வதந்தி. ஜாதன் அஜாதன் என்னும் சகோதரர்களுக்குத்தெரியாத அரசர்களும் பிரபுக்களும் கிடையாது. அவர்கள் போகாததேசங் கிடையாது. ஜாதன் என்பவனுக்கு சுமார் - முப்பத்தைந்து வயதிருக்கும். அஜாதனென்பவனுக்கு முப்பதிருக்கும். கள்ளச்சாதியரைச் சேர்ந்தவராயினும் பார்ப்பதற்கு போர்வீரர்களைப்போலிருப்பார்கள். அவர்கள் வில்வித்தை, வாள்வித்தை, குத்துசண்டை முதலிய வித்தைகளிலெல்லாம் தேர்ந்தவர்கள். அவர்கள் தடியெடுத்து சுற்றவாரம்பித்தால் ஒருவரும் கிட்ட நாடமுடியாது. வாளாயுதத்தை கையில் எடுத்துவிட்டால் வாழைக்காயைத் துண்டம்போடுவதுபோல் எதிரிகள் தலைகளைத் துண்டித்து விடுவார்கள். இராக்காலங்களில் ஊர்களில் பிரவேசிக்கும்போது சகல ஆயுதங்களையும் தயார் செய்துகொண்டு தான் புறப்படுவார்கள். இச்சகோதரர்களிருவரும் எப்போதும் வைத்திருப்பது சோடாதடிமாத்திரந்தான், மற்ற ஆயுதங்கள் தேவையாயிருந்தால் ஓர்விதமானசப்தம் செய்தவுடனே அநேக கத்திகள் வாளாயுதங்கள் முதலானவை அவர்களெதிர் வந்து நிற்கும்.

இப்படியிருக்கையில் ஒருநாள் சாயந்திரம் கள்ளச்சகோதரர்களுடைய தலைமை வேலைக்காரனான நீலன் என்பவன் ஆனந்தபுரியில் போய்க்கொண்டிருந்தான். அவ்வூர் சிற்றரசன் அரண்மனையில் அநேக வேலைக்காரர்கள் சிலமாயிருந்த கட்டடங்களைப் பழுதுபார்த்துக்கொண்டிருந்தார்கள். சிலர் கூடி அரண்மனைக்கு வெளியே பந்தல் போட்டுக்கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் அரண்மனைக்கு எதிரே மணற்குவியலைச் சேர்த்தார்கள். வேறு சிலர் அநேக பூஞ்செடிகளை வரிசையாகவைத்து அரணமனையை அழகுபடுத்தினர். வேறு சிலர் அரண்மனைக்கு வெளியில் அநேக தீபக்கம்பங்களை நாட்டினர். இத்துடன் அநேக சேவகர்கள் அரண்மனையைச்சுற்றிக் காவல்காத்துக் கொண்டிருந்தனர். இவைகளையெல்லாம் பார்த்த நீலன், இதென்ன? இந்த அரண்மனை முன்னிருந்தவாறென்ன? இப்போதிருக்கும் மாதிரியென்ன? ஏதோ விசேஷமிருக்கிறதென்று நினைத்து அவ்விடத்துள்ள சில வேலைக்காரர்களைக் கேட்டு சங்கதியை விசாரித்தறிந்தான். சூரியன் அஸ்தமித்து நன்றாய் இருட்டினவுடன் காட்டிற்பிரவேசித்து கையிலிருந்ததடியால் பூமியைத் தட்டிக்கொண்டு சிருங்கமலையை நெருங்கி, சுரங்கவழியாய் நுழைந்து கோட்டைக்குள் நீலன் சென்றபோது ஜாதன் தன் தம்பியுடன் தாம்பூலம் போட்டுக்கொண்டு ஏதோ பேசிக்கொண்டிருந்தான். "ஐயா! இன்றைக்கோர் சங்கதி. ஆனந்தபுரி யரண்மனையில் விசேஷம். ஆனந்தபுரி சிற்றரசன் நரேந்திரன் இறந்தபின் அவ்வரண்மனையில் ஒருவரும் வசிக்கவில்லையென்பது உங்களுக்குத் தெரியும். என்னகாரணத்தினாலோ சத்தியபுரி சந்திரசேகரபிரபு தன் குடும்பத்துடன் ஆனந்தபுரியில்வந்து வசிக்கப்போகிறாராம். அதற்காக நரேந்திரன் தம்பி சுலோசனன் அரண்மனையைச் சுத்தஞ்செய்து அலங்கரிக்கும்படிக்கு உத்திரவு அனுப்பினாராம். வேலை தடபுடலாய் நடக்கிறது. பந்தல் என்ன, தீபக்கம்பங்களென்ன, சேவகர்களென்ன, ஆனந்தபுரி அமளி குமளியா யிருக்கிறது. பெரிய மகாராஜாவின் வரவை யெதிர்ப்பார்த்து குடிகள்செய்யும் ஆடம்பரம்போலிருக்கிறது. சந்திரசேகர பிரபுவுக்கும் மகதவரசனுக்கும் ஏதோவிரோதமாம். அதனால் அரசன் பிரபுவை ஊரைவிட்டு ஓட்டிவிட்டானென்று சிலர் மெள்ளபேசிக்கொள்ளுகிறார்கள்" என்று நீலன் சொல்லிமுடித்தான். இதைக்கேட்ட சகோதரர்களில் ஜாதன், "ஹேநீலா அந்த சந்திரசேகரனுடன் கூட இன்னும்யார் வருகிறார்கள்? " என்று கேட்டான். "சுவாமி! குடும்பத்துடன் வருவதாய்க் கேள்விப்பட்டேன். " என்று நீலன் பதிலளித்தான். "குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இன்னாரென்று உனக்குத் தெரியுமா? " என்று மறுபடியும் ஜாதன் கேட்டான். "தெரியாது அதைநான் விசாரிக்கவில்லை சுவாமி" என்று நீலன் பயந்து மெள்ளசொல்ல, ஜாதன் கோபித்துக்கொண்டு "என்னடா மூடா! ஒருவிஷயத்தைக்குறித்து விசாரிக்கப்புகுந்தால் முழுமையுந் தெரிந்துகொண்டு வராமல் அறைகுறையாய் விசாரித்துக்கொண்டு வருகிறாய். இந்த தப்பிதத்திற்காக உன்னை என்னசெய்யலாம்? இந்ததடவை உன்னை மன்னித்தேன். " என்று சொன்னதைக்கேட்ட நீலன் நடு நடுங்கிப்போய் ஒன்றும் பேசாது மௌனமாய் நின்றான். அதே சமயத்தில் காலன் என்னும் மற்றோர்வேலைக்காரன் வெகு அவசரமாய் ஓடிவந்து "பிரபுக்களே! நான் ஆனந்தபுரிக்குப்

போயிருந்தேன். அவ்வூர்க்கு சந்திரசேகர பிரபு குடும்பத்துடன் வருகிறாராம். ஊர் அமக்களமாயிருக்கிறது. அந்த பிரபுவுக்கு பேரழகுவாய்ந்த ஓர் பெண்மணியிருக்கிறாளாம். அவளும் கூடவருகிறாளாம். அவளுக்கு இன்னும் கல்லியாணமில்லையாம். ஆனந்தபுரிக்குச் சொந்தக்காரர் சுலோசனர் அப்பெண்ணைக் கல்லியாணம் செய்துக்கொள்ள தீர்மானித்திருக்கிறாராம். இந்த சமாச்சாரத்தை அந்த அரண்மனைக் கிழச்சேவகன் சாத்தகி தன் பெண்டாட்டிக்குசொல்லிக்கொண்டிருக்கும்போது நான் கேள்விப்பட்டேன்." என்று காலன் சொல்லும்போது அதிக சந்தோஷத்துடன் கேட்டுக்கொண்டிருந்த சகோதரர்களில் ஜாதன் "ஹெகாலா; நல்ல சமாச்சாரம் கொண்டுவந்தாய். இன்னும் ஏதாவது உண்டோ?" என்று கேட்க, "நமக்கு வேண்டியது வேறொன்றுமில்லை." என்று காலன் பதில்கூற ஜாதன் இவனை மெச்சிப் பேசிப்போக உத்திரவுகொடுத்துவிட்டு, அங்கு மௌனமாயிருந்த நீலனைப்பார்த்து "பார்த்தையா காலன் கொண்டுவந்தசெய்தி என்னமாயிருக்கிறது. நீ தலைமை வேலைக்காரனாயிருந்தும் நமக்கு இன்ன சமயத்தில் இன்னது வேண்டியதென்று அறிந்துக்கொள்ள முடியவில்லை. இனி ஜாக்கிரதை. போய்வா." என்று சொன்னான்.

(இன்னும்வரும்.)

## நானுசிவவாதக் கட்டளை.

(முன்தொடர்ச்சி.)

சம்ஹாரமாவது கால அளவையில் இயமனாகவும் பிரளயாந்தத்தில் ருத்திரனாகவும் சம்ஹரிக்கின்றவருக்கு ருத்திரன் யென்று பெயராம். இவை மூலப் பிரகிருதியின் சத்துவகுண கற்பனையாம். இனி மூலப்பிரகிருதியில் இராஜதகுணம் அநேக ரூபமாய்ப் பிரிந்து அவித்தைகளென்றும் ஜீவகாரண சரீரமென்றும் ஒன்றுக்கொன்று தாதான்மியமாக சொல்லப்படும். மூலப்பிரகிருதியின் காவிக்கல்போலொத்த ரஜோகுணம் நானாரூபமாய் ஒன்றற்கொன்று உயர்வு தாழ்வு உள்ளவைகளாயிருக்கும். அவைகளுக்கு அவித்தைகளென்றும் ஜீவர்கள் பிரதிபிம்பிக்கிரதற்குக் காரணமாயிருக்கின்றமையால் ஜீவகாரண சரீரங்களென்றும் பெயர். அந்த அவித்தைகளிடத்தில் மலின ஜலப் பிரதிபிம்பம்போல பிரமசைதன்னியம் பிரதிபிம்பிக்கும். அறிவு மறைப்பாயிருக்கின்ற அவத்தைகளிடத்தில் கலங்கல்ஜலத்தில் பிரதிபிம்பிக்காநின்ற சூரியப் பிரதிபிம்பம்போல பிரமசைதன்னியம் பிரதிபிம்பிக்கும், அந்தச் சைதன்னியப் பிரதிபிம்பங்களுக்கு கிஞ்சிக்ஞரென்றும், சிதாபாச ஜீவரென்றும் பெயர். கிஞ்சிக்ஞராவது = அற்ப அறிவுள்ளவர். சிதாபாசராவது=சித்துப் போலத் தோன்றி சித்து லக்ஷணமில்லாதிருப்பவர். சிதாபாசர் ஜீவர். ஜீவராவது=ஜாக்கிரமுதல் மோக்ஷபரியந்தம் ஜீவிக்கின்றமையால் ஜீவரென்றும் பெயர். இந்த அவித்தைகளிடத்திலேயும் இராஜதத்தில் சாத்துவீகம், இராஜதத்தில் இராஜதம், இராஜதத்தில் தாமதமென்று மூன்று குணங்களுண்டு. இராஜதத்தில்சாத்துவீகம் பிரதானமாகும்போது இராஜதத்தில் இராஜதந் தாமச மிரண்டுமடங்கி சாத்துவீகம் மேலிடும்போது அதில் பிரதிபிம்பித்த சிதாபாசர் தத்துவஞான நிஷ்டராவர். தத்துவங்களை உணர்ந்த ஞானியாவார்கள். இராஜஸத்துக்கு ராஜஸம் பிரதானமாகும்போது இராஜசத்தில் சாத்துவிகம் தாமசம் இரண்டுமடங்கி இராஜஸம் மேலிடும்போது அதில் பிரதிபிம்பித்த சிதாபாசர் காமக்குரோதாதி பதின்மூன்றுகுணங்களையுடையவராய் கர்மானுஷ்டானபரராவார்கள். பதின்மூன்று குணங்களாவன:— இராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், ஈரிஷை, டம்பம், அசூயை, தர்ப்பம், அகங்காரமெனப்படும்.

அன்னியனுடைய ஸ்திரீயைச் சேரவேண்டுமென்று வருகிற சித்தவிருத்திக்கு இராகமென்று பெயர். தனக்கு அபகாரம் பண்ணினவனுக்கு பதில் அபகாரம் பண்ணவேணுமென்று வருகிற சித்தவிருத்திக்கு துவேஷமென்று பெயர். புத்திர களத்திர தனதான்னிய சம்பத்துக்கள் மேலும் மேலும் உண்டாகவேண்டுமென்று வருகிற சித்தவிருத்திக்குக் காமம் என்று பெயர். தனக்குவேண்டிய காரியங்களில் விக்கினஞ் செய்கின்றவர்களிடத்தில் உண்டாகுங் கோரசித்தவிருத்திக்குக் குரோதம் என்று பெயர். தன்னுடைய பொருள்களில் ஒருவருக்கும் ஒன்றும் கொடாதிருக்கவேணுமென்று வருகிற சித்தவிருத்திக்கு லோபம் என்று பெயர். தன்னுடைய பெண்டீர் பிள்ளை பண்டபதார்த்தங்களில் அத்தியந்தப் பிரீதியுள்ள சித்தவிருத்திக்கு மோகமென்று பெயர். தன்னுடைய பலம் ஐஸ்வரியம் முதலிய பெருக்கத்தால் ஒருவரையும் மதியாது அவமதிக்கின்ற சித்தவிருத்திக்கு மதமென்று பெயர். ஒருவர் சுகத்தையும் பெருமையையும் கண்டு இவ்வளவு அவர்களுக்கு உண்டாகலாமாவென்று சகிக்காமல் நிந்திக்கின்ற சித்தவிருத்திக்கு மாச்சரியமென்று பெயர். தனக்கு வந்த துக்கம்போல பிறருக்கும் வரலாகாதா என்கிற சித்தவிருத்திக்கு ஈரிஷைஎன்றுபெயர். தன்னுடைய சுகத்தையும் பெருமையையும்போல பிறருக்கும் வரலாமாவென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்கு அசூயையென்றுபெயர். தான்

பண்ணிய புண்ணியத்தைச் சகலரும் நன்றா யிருக்கிறதென்று புகழும் புகழை இச்சிக்கின்ற சித்தவிருத்திக்கு டம்பம் என்று பெயர். புத்திர மித்திர தன தான்னிய சம்பத்து தனக்கு உள்ளதுபோலப் பிறருக்கும் இல்லை என்று இறுமாப்படைகிற சித்தவிருத்திக்கு தற்பம் என்று பெயர். நான் பிடித்தபிடி நிறைவேற்றாமல் விடுவேனாவென்கிற எண்ணமும் எவ்விதமும் நிறைவேற்றுவேன் நானென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு அகங்காரமென்று பெயர்.

சத்குணங்களாவன:— இச்சை, பக்தி, சிரத்தை என மூன்று. இச்சையென்பது மலஜல விசர்க்கஞ்செய்தல், பசிதாகத்திற்கு அன்னபானஞ் செய்தல். பக்தியென்பது குருவினிடத்திலும், ஈஸ்வரனிடத்திலும் தன்னின் மேம்பட்டோரிடத்திலும் விசுவாசஞ் செய்தல். சிரத்தையென்பது குருவினிடத்திலும் சுருதியினிடத்திலும் மிகவும் விசுவாசித்தல்.

முற்கூறிய பதின்மூன்று துர்குணத்தையும் விடுத்து இந்த மூன்று சற்குணத்தையு மடையவேண்டியது அவசியம். இத்துடன் முற்கூறிய பதின்மூன்று குணங்களையும் வைதீகமார்க்கத்தில் கைகொண்டு லௌகிக மார்க்கத்தில் கைவிடவேண்டு மென்பதும் அவசியம். இராஜதத்தில் தாமதம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசன் சோம்பல் நித்திரை மயக்கங்களையுடையவராவார்கள். இராஜதத்தில் சாத்விகம் இராஜதம் ஆகிய இரண்டுமடங்கி தாமதம் மேலிடும்போது அதில் பிரதிபிம்பித்த சிதாபாசர் இம்மைப் பயனுக்கு உரித்தாயிருக்கின்ற லௌகீகத்திற்கும் மறுமைப்பயனுக்கு உரித்தாயிருக்கின்ற வைதீகத்திற்கும் விக்கினமாயிருக்கின்ற சோம்பல் நித்திரை மயக்கங்களையுடையவராவார்கள். இவை இப்படி மூலப்பிரகிருதியின் ராஜதகுணகற்பனை சொல்லப்பட்டது. மூலப் பிரகிருதியின் தமோகுணத்தில் ஆவரணம் விக்ஷேபம் என்னு மிரண்டு சக்திகளுண்டு. அதாவது மூலப் பிரகிருதியின் நீலக்கல்போலொத்த தமோகுணத்தில் ஆவரணம் விக்ஷேபம் என்னு மிரண்டு சக்திகளுண்டு. ஆவரணசத்தியாவது - மறைப்புச்சத்தி. விக்ஷேபசத்தியாவது - நினைப்புச்சத்தி. இவ்விரண்டில் ஆவரணசத்தி அல்லது மறைப்புச் சத்தியானது தத்துவஞானிகளு மீசுவரனுந்தவிர மற்ற சீவர்களுக்கு சரீரத்திரயம் சிதாபாசன் சாக்ஷிசைதன்னியம் என்பவைகளில் ஒன்றற்கொன்று பேதந் தெரியவொட்டாமல் மறைத்து நிற்கும். சரீரத்திரயமாவது ஸ்தூல சூட்சுமகாரணம் என மூன்றும். சிதாபாசனாவது ஜீவன். சாக்ஷி சைதன்னியமாவது பிரமம். ஆவரணசத்தியினால் மறைக்கப்பட்ட ஜீவன் இருபத்துஒன்பது தத்துவங்களையும் நானென்று தருமைப்பாடாக அபிமானிப்பான். இருபத்து ஒன்பது தத்துவங்களாவன:- ஸ்தூலசரீர தத்துவம் ஆறு, சூட்சுமசரீரதத்துவம் இருபது, காரண சரீரதத்துவம் ஒன்று, சிதாபாசன் ஒன்று, சாக்ஷிசைதன்னியம் ஒன்று என இருபத்தொன்பதேயாம். இந்த மறைப்புச் சத்தியால் மறைக்கப்பட்ட ஜீவன் அமாவாசை யிருளில் மேகஞ் சூழ்ந்தது போல மறைக்கப்பட்டிருப்பன். அந்த துர் அபிமானத்திற்கு அகங்காரகிரந்தி என்றும் சம்சாரபந்தமென்றும் சொல்லப்படும். சற்குரு கடாக்ஷத்தினால் அனேக ஜன்ம நிஷ்காமிய புஞ்ச பரிபாகத்தினால் ஈசுவர உபாசனையினால் ஏகாக்கிர சித்தமும்பெற்று சற்குருவை கிட்டி அவரது கிருபையைப் பெற்று சற்சாஸ்திர துவாரத்தினால் சிரவண மனன நிதித்தியாசனங்களைச் செய்து அந்த ஆவரணம் நீங்கி இருபத்தொன்பது தத்துவங்களுள் ஒன்றற்கொன்று பேதந் தெரிகின்றதுவே முக்தி. இவையே ஆவரண சத்தியின் காரியமாம், இவையே மறைப்புச் சத்தியின் வல்லபமாம். விக்ஷேபசத்தியினிடத்தில் சத்ததன் மாத்திரையான ஆகாசமும், ஆகர்சத்தில் பரிசதன்மாத்திரையான வாயுவும், வாயுவில் ரூபதன்மாத்திரையான தேயுவும், தேயுவில் ரசதன்மாத்திரையான அப்புவும் அப்புவில் கந்த தன்மாத்திரையான பிருதுவியும் தோன்றிற்று. விக்ஷேப சக்தியாகிய நினைப்புச் சத்தியினிடத்தில் சப்தமே சுவபாவமா யிரானின்ற ஆகாசம் தோன்றிற்று. ஆகாசத்தில் பத்திலொன்றாக ரூபமே சுவபாவமா யிரானின்ற அப்பு தோன்றிற்று. அப்புவில் பத்திலொன்றாக கந்தமே சுவபாவமா யிரானின்ற பிருதுவி தோன்றிற்று. இந்த சூக்ஷம பஞ்சபூதத்திற்கு காரணமாயிருக்கின்ற விக்ஷேப சக்தியினிடத்திலே தமசில்சத்துவம் தமசில் ரஜசு தமசில் தமசுஎன்னும் முக்குணங்களும் அப்பங்கிலிருந்தபடியினாலே அதன்காரியமான அந்தப்பஞ்சபூதங்களும் அம்முக்குணங்களுடனே தோன்றின. அந்த சூட்சும பஞ்சபூதங்கள் உற்பத்தியாகிறதற்குக் காரணமாயிருக்கின்ற நினைப்புச் சத்தியினிடத்திலே தமசில் சத்துவம் தமசில் ரஜசு தமசில் தமசு என்னு முக்குணங்களும் அற்பமாய் அதில் அடங்கி யிருந்தபடியால் அதன்காரியமான அந்தப் பஞ்சபூதங்களும் அம்முக்குணங்களுடனேதோன்றின. அந்தப் பஞ்சபூதங்களுக்கு தன்மாத்திரைகளென்றும் பஞ்சீகரணப்படாமல் அபஞ்சீகிருதமாயிருக்கின்றபடியால் சூட்சுமபூதங்களென்றும் முக்குணபூதங்களென்றும், இப்பஞ்ச பூதங்களிடத்தில் சூட்சுமசரீரங்களும் ஸ்தூல பூதங்களுந் தோன்றின. அதெங்ஙனமெனில் ஆகாசம் முதலான பஞ்சபூதங்களின் சத்துவாம்சத்தின் ஒவ்வொரு மாத்திரைகளொன்றாகச் சேர்ந்து அந்தக்கரண முண்டாயிற்று.

(இன்னும்வரும்.)

உதைப்போம். நீ ஒருதுடைகாலி, நீ வந்தநாள்முதல் எங்கள் செல்வமெல்லாம் தொலைந்துபோயிற்று" என்றார்கள். அவர்களைநோக்கி சன்னியாசி பொருமையுடன் "பிள்ளைகாள்! உங்களுக்கு பணம்தானே வேண்டும். இதோ இருக்கும் புதரில் ஓர் தவலை நிறைய திரவியம் இருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு நீங்களிருவரும் சமபாகமாய்ப் பங்கிட்டுக் கொள்ளுங்களென்றார் அவ்வாறே அவ்விருவர்களும் அங்கேசென்று புதரைச் சோதிக்கையில் நாகப்பாம்பு சீறி விழுந்தது. உடனே உளறியடித்துக்கொண்டு இப்பால் ஓடிவந்து அந்தசாதுவைப்பார்த்து "அடே மோசக்காரா, திரவியமென்று ஆசைகாட்டி பாம்பிருக்குமிடத்துக்குப் போகச்சொன்னாயா, இதோ நாங்கள் உன்னைத் தடியாலடிக்கிறோம்" என்றார்கள். உடனே மகான் அவர்களைநோக்கி "அடே மூடர்களே, நீங்கள் அந்தப் பாம்பைக்கொன்று புதரைப் பரிசோதியுங்கள் என்றார். சகோதரர்கள் ஓர் மண்வெட்டியால் அப்பாம்பை வெட்டியெறிந்து திரவியத்தையெடுத்து சமபாகமாய்ப் பங்கிட்டுக்கொண்டு சுகமாய்க் காலங்கழித்தார்கள். பாம்பு ஜன்மத்தைவிட்டொழித்த இராமசுவாமிக்கு மகானுடையகிருபையால் ஓர் விமானம்வந்தது. உடனே அவன் அதிலேறிக்கொண்டு சொர்க்கலோகம்போனான். இந்தக்கதையைப்படிக்கும் புத்திமான்கள் இதன்சாரத்தை அறியக்கடவர்.

## ஏற்பதிகழ்ச்சி.

### காப்பு.

நிலனாகி நீராகித் தீக்காற்றாகி
　நிர்க்குணமாய் நிர்மலமாய் நீடுவாழ்வாய்
வலனாகி வானிரவி மதியமாகி
　வளர்ந்தசெஞ் சடைமுதல்வன் புதல்வனாகிப்
பலநாளு மடியவர்கட் கமுதமாகிப்
　பாதபமாய்க் கரந்துநின்று வள்ளிவேட்ட
நலமான நாளினவர் நினைந்தவேளை
　நால்வாயாய் வந்தபதம் சிரமேல்வைப்பாம்.

"ஏற்பதிகழ்ச்சி" யென்னும் வாசகத்திற்கு யாசித்தல் இகழ்வானது எனப் பொருளாம். ஏற்பது எக்காரணம்பற்றி இழிவு என, அறியவேண்டின் உலகத்தின் பொது இயற்கையையும் இரவின் கொடுமையையும் ஆராயின் நன்கு விளங்கும்.

முன்னர் இரக்கவேண்டி வருவதற்கு காரணம் யாதெனநோக்குவோம். இல்லாமையே முதற்காரணமாகும் அவ்வில்லாமைக்கோ காரணம் பல. அவற்றுள் மடித்தன்மை, சிக்கனமின்மை ஆசைப்பெருக்கம் முதலியவை முக்கியமானவை.

'இலமென்றசை யிருப்பாரைக்காணி
　னிலமென்னு நல்லாள் நகும்.'

தன்னிடத்தில் ஒன்றுமில்லையென்றெண்ணிச் சும்மாவிருக்கும் மடியரைக்கண்டால் உழைத்து வேலை செய்கிறவர்களுக்கெல்லாம் தக்கபலனையளித்து அவர்களைச் சுகமடையச்செய்யும் நிலமகளாகிய நல்லாள் சிரிப்பாள் என்பதாம். ஆகலின் சோம்பலே தரித்திரத்திற்கு வித்தென வுணர்ந்து ஏதேனுந் தொழின்முயற்சியை மேற்கொண்டு வாழமுயலாவிடின் சோம்பர்கள் தேம்பித்திரியவேண்டி வருமென்பதற் கையமில்லை.

இஃதைத் தெற்றெனவுணர்ந்து தொழின்முயற்சியை மேற்கொண்டு பொருளீட்டும் பலர் பின் நிரப்பால் வருந்துவதென்னேவெனின் தாமீட்டியபொருளை செவ்வனே செலவிட அறியாமையே.

ஆனமுதலி லதிகஞ்செலவானால்
　மானமழிந்து மதிகெட்டுப்—போனதிசை
யெல்லார்க்குங்கள்ளனா யேழ்பிறப்புந்தீயனாய்
　நல்லார்க்கும் பொல்லனா நாடு.

என்றபடி வரவுக்குத்தக்கசெலவு செய்யவேண்டுமென்பதையுணராது பலர் அதிகம் செலவிடுகிறார்கள். அதற்கு நிமித்தம் தங்களைப்பற்றி அவர் உட்கொண்டுள்ள உயர்ந்த எண்ணமே. தம்மைச் சூழ்ந்துள்ள பலரின் தற்கால பழிப்பையஞ்சி இடம்பமாய்ச்செலவிட்டு கைகள்வறண்டு மிக்க வினைப்பட்டு வருந்துகிறார்கள். அந்தோ! இவர்கள் மதியென்னே. தம் முன்னோர் மிக்க தனிகரா யிருந்தாரென்றும் தாங்கள் அப்பெரியாரின் சந்ததியென்றும் பிறர் புகழக்கேட்ட சிலர் தம் அற்றைய நிலைமையைமறந்து தமதல்லாத முன்னோர் நிலையிலிருப்பதாக மருண்டு மதிமாறிச் செலவிட்டு வருந்துவதை நாம் காண்கிறோம். இவர்கள் நிலையும் பரிதபிக்கத்தக்கதே. ஆகலின் எக்காலத்தும் தங்கள் நிலையை உள்ளபடியுணர்ந்து செலவிடுவோர் மிடியென்னும் பாவியின் கொடியவயிற்றினின்றும் தப்புவாரென்பது திண்ணம்.

மேலும் இன்மைக்கு ஆசைப்பெருக்கம் ஒருகாரணமாகக் கூறப்பட்டது. ஒருவன் தன் னவாவை யடக்காவிடில் " பிடிபடுக்கப்பட்டகளிறு " போன்று, தன் மனத்தின்வழி யொழுகித்தான் அதையடக்கி யாளமுடியாதவனாய் தனக்கு சுகமும் கிடைக்காமல் அல்லலுறுவான். உள்ளது போதுமென்ற தெளிவே ஒருவனுக்கு நிறைந்த செல்வமென்பது "பணக்காரமூடர்" என்ற கதையால் தெள்ளிதிற் புலப்படும். ஆதலின் மேற்கூறப்பட்ட உழைப்பு சிக்கனம் கிடைத்தமட்டில் திருப்தி

ஆகிய நற்குணங்களைக் கொண்டொழுகின் ஒருவன்மிடியால் வருந்தானென்பதற் கையமில்லை எனினும்

“ஊழிற்பெருவலியா வுளமற்றொன்று
சூழினூஉம் தான்முந்துறும்”

என்றபடி மிக முயற்சிசெய்து பொருளீட்டினும் ஈட்டினபொருளை சிக்கனச் செலவிடினும் அவைகட்கு மாறாக நம் யத்தனங்களையெல்லாம் பாழ்படச்செய்யும் விதிவலியை யார் கடக்கற்பாலர். இவ்வகை விதிவலியால் கொணரப்படும் இலம்பாட்டின் கொடுமையைச் சற்றே பகர்வாம். இவ்விலம்பாடு வலம்பாட்டையொழித்து இழித்தக வியற்றத்தூண்டி புறை வாய்வை அடக்கும் அன்பு முதலிய நற்குணங்களை ஒருவனின்றும் அகற்றுகின்றது. இல்லானுக்கு அன்பு இடம்பொருளேவலாதிய விருந்தும் பயன்படாவாம். இவ்வுலகு இன்பங்களை அநுபவியாதபடி தடுப்பதுடன் மறுமையிலும் அவனை நற்கதிக்குய்க்கும் நெறியையடைக்கும் தாழ் ஆகிறது. இதனாலேயே “கொடிது கொடிது வருமைகொடிதென்றார்” ஔவையாரும். இத்தகைய வறுமையுற்றப் போழ்தும் தைரிய இலக்குமியைக் கைவிடாதுபோற்றி ஏற்பது இன்றென விரதமேற்கொண்டு “தொழுதூண்சுவையின் உழுதூணினிது” எனினும் இரவூண்சுவையின் தொழுதூ ணினிதெனக்கொண்டு ஒருவரைச்சார்ந்து வழிபட்டொழுகி ஊண்மிசைத்தலே உத்தமமாம்.

நிற்க உலகின் பொதுவியற்கை யின்னதென்றோர்வோம். மன்பதையிற் பெரும்பாலர் தீக்குணத்தரேயன்றித் திங்குணத்தரல்லர். ‘நம்மாலே யாவரிங்கல்கூர்ந்தார் எஞ்ஞான்றுந் தம்மாலாமாக் கமிலரென்று’ எண்ணிச் செருக்கிப் பிறர்க்கீய மனவொவ்வாமலும், ஈயாமலும், ‘நிழலிட்டு மலர் காய் கனிகளீந்தருளும் மாமரத்தைக்கட்டும்மடை முள்ளை யொத்து, ஈதலைமறுத்தும் வாணாளை வீணாளாக்கி யருநரகுய்க்கும் நெறியைப் பின்பற்றித் திரிந்துள்ளார் பலர். மேலும்.

‘வருவாயுட்கால் வழங்கிவாழ்தலினிதே’
‘விருந்துபுறந்தரான் இல்வாழ்க்கையென்பதிருள்’

‘அதிதியெவன்பால்வந்து முகம்வாடுமோவவன்றன்
பதிதருபுண்ணியங்கொண்டு பாவத்தையவர்க்கீவான்
மதிகொடியசண்டாள மனைக்கண்ணுங்கதிரெறிப்பான்
புதியரெவர்வந்துறினும் பூசிப்பார்பெரியோரே.’

‘மண்ணார்சட்டிகரத்தேந்தி மரநாய்கெனவுங்காலினராய், அண்ணாந்தோடியிரப்பாரை யறிந்தோமறிந்தோமம்மம்மா, பண்ணார்மொழியார்பாலடிசில் பைம்பொற்கலத்திற்பரிந்தூட்ட, உண்ணாநின்றேயொருவர்க் கழுதவாமரந்தரிவர்தாமே.’

பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை பிறந்துமண்மே, லிறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவே, குறிக்குமிச்செல்வம் சிவன்றந்ததென்று கொடுக்கறியா, திறக்குங்குலாமருக் கென்செய்குவேன் கச்சியேகம்பனே.’

முதலிய பல நீதிமொழிகளைக் கற்று. கற்றவழி நிற்பதை முற்றும் மறந்ததும் போதாதென்று, ‘படிப்பதிராமாயண மிடிப்பதுவிண்டுகோயிலே’ என்றபடி அரும்பொன்னும்மணியு மடுக்காய்க்குவித்துத் தாமுமநுபவியாது, பிறர்க்கு மீயாத பூதங்கள் பலவுள. அத்தகைய பூதம் தனதென்றிருக்கும்பொருளை யானுமெனதென்றிருப்பன்; என்னோவெனின் அப்பூதமும் அப்பொருளை வழங்காபயன் றுவ்வா யானுமத்தகையனே. ஆதலின் ‘இல்லார் குறையிரந்து நிற்பபோற்றாழும் தலைவணங்கித் தாழப்பெறினே, பொருளுடையார் அஃதுடையார் எனப்படுவர். அதன்றி அண்டியிரப்பார்க்கீயாதார் செல்வம், வம்புக்காம், பாழ்க்காம் பரத்தையர்க்காம் என்றது சொல்லாதுணரற்பாலது.

மேற்கூறிய தகையர் மெத்தவுளரேனும், பனை, தெங்கு, கமுகு, கதலி, யாதிகளை ஒத்த ஈகையாளரும் பல்லோர் உளர். இங்நல்லார் புகழ்ப்பாடதிகம் வேண்டிற்றிலர். இங்நல்லவர்க்கன்றி யல்லவர்க்காக உலகநிலை பெறுகையில்லை.

இனி இரவின்கொடுமையை யியம்புவோம்.

“புறத்துத்தன்னின் மைநலியவகத்துத்தன்
நன்ஞானநீக்கி நிறீஇயொருவனை
யியாயெனக்கென் றிரப்பானேலங்கிலையே
மாயானோ மாற்றிவிடின்”.

வெளியில் தன்னின்மை, ஒருவனையிரக்கத் தூண்டி வருத்தவும், ‘இன்னாமைவேண்டி னிரவெழுக’

‘நல்லாறெனினுங் கொளல்தீதுமேலுலக
மில்லெனினு மீதலேநன்று’

‘பல்லெலாந் தெரியக்காட்டிப் பருவரல் முகத்திற்கோட்டி, சொல்லெலாம்சொல்லிநாட்டித் துணைக்கரம் விரித்துநீட்டி, மல்லெலாமகலவோட்டி மானமென்பதனைவீட்டி, யில்லெலாமிரத்தலந்தோ விதிவிழிவெந்தஞான்றும்’.

என்னும் நீதிகளைப் படித்ததனாலுண்டாய தன்னல்ல ஞானமெல்லாம்,விரிகதிர் வரக்கண்ட பனியன்னவவ்வின்மைக்கு முன்னரகன்றோடவும், ஓர் செல்வனைச்

சார்ந்து நின்று, வேதம் பயின்றவாயால் 'ஈமின்' என்னும் புன்சொல்லைச் சொல்லும்போது, மனமழுங்கி ஏத்துணை யல்லலவனுறுவான். அக்கால் அச்செல்வன் சற்றும் இரப்போன் மனநிலையைப் பகுத்தறியாது இல்லையென மறுக்கின் அவ்யாசகன் மதிநீங்கி மூர்ச்சித்துக் கீழ்வீழ்ந் துயிர் துறந்து மடியானோ? இதனாலன்றோ "செல்வர்பாற் சென்றீ, யெனக்கென்னு மிம்மாற்றந் தனக்குரியமானந் துடைத்து தருமத்தை வேர்பறித்து மானந்துடைப்ப தோர்வாள்" எனக் கூறியுள்ளார். மேலும் இழிதக்கவையைச்செய்து ஒருவன் பசியாரவுண்டிருத்தலின் பழிக்கத்தக்கவையை செய்யாது பசித்திருத்தல் நலமாகும். ஏனெனில் எந்தஜீவனை யுடலில் நிறுத்த எண்ணி, இழிதொழில்களைச்செய்து உணவுதேடுகிறானோ, அந்த சிவனுக்கு ஏமமில்லாமையால் அது தன்னிச்சையில் நீங்குகிறது. அன்றியும் ஒருவன் 'அழித்துப்பிறக்கும் பிறப்பும்' விழித்திமைக்கும் மாத்திரையாக விருக்கிறது.

ஆயினும்,

'இரக்கவிரத்தக் கார்க்காணிற்கரப்பின்
அவர்பழி தம்பழியன்று'
'இன்பமொருவற் கிரத்தலிறந்தவை
துன்பமுறுவரின்' என்று கூறியுள்ளபடி,

புல்லா அகம்புகுமி னுண்ணுமினென்பவர் மாட்டும், கரவாதுவந்தியுங் கண்ணன்னார் கண்ணும், இரக்கின் என்னையென்று வினயின், இரவினை யுள்ளுங்காலுள்ள முருகுமால் அவ்விரவினையும் இரவென்னுங் காரணத்தான் மேலோர் இழித்து விலக்குவர்.

சுருக்கிப்புகலின், உலகில் யாசகர் குறையறிந்திவோர்மிகச் சிலரே யாதலானும், அத்தகைய வள்ளல்களிடத்தும்சென் றிரத்தலிழிவாதலானும், அவ்விரவை நினைக்குந்தோறும் மனமுருகுமாதலானும், இருப்பவர் கரப்பின் ஏற்பவர்செயலற்று மடிவராதலாலும் ஏற்பது மெத்த இகழ்ச்சியாம்.

## கடவுளைக்காட்டு.

கடவுளைக்காட்டு என்று சிலநாஸ்திகர்கள் நம்மைக் கேட்பதுண்டு. இப்போதும் இங்கிலிஷ் பள்ளிக்கூடத்தில் 4-வது 5-வது வகுப்புகளிற் படிக்கும் அற்பபடிப்பாளிகளாகிய பிள்ளைகள் "ஸ்வாமியில்லை. எல்லாம் சுபாவம். ஸ்வாமியிருந்தால் அவரை இங்கேவரச்சொல்லுபார்ப்போம்" என்று கூறுகிறார்கள். இத்தகையோரை ஆகாசத்திலுள்ள நக்ஷத்திரங்களைப் பார்த்திருக்கிறீர்களாவென்றால், ஆம் பார்த்திருக்கிறோம் என்பார்கள். அடடா அவைகள் நக்ஷத்திரங்களினின்றும்வீசும் பிரகாசமன்றோ? ஒளியைப் பார்த்துவிட்டு நக்ஷத்திரத்தைப் பார்த்ததாக சொல்லுகிறீர்களே யெனில் பதில் சொல்லத் தெரியாமல் விழிப்பார்கள். வெளிச்சத்தைக் கண்டு நக்ஷத்திரமுண்டென ஊகிப்பதுபோல் சிருஷ்டியைக்கண்டு கடவுளுண்டென ஊகிக்கவேண்டும். கடவுளைக்காட்டினால் பார்ப்பவனுக்குக் கண்ணில்லாமற் போனால் அவரை எப்படி தரிசிக்கக்கூடும்? பிறவிக் குருடன் ஆகாசத்தில் சூரியனில்லையென்று சொல்லுவான். அவன் சூரியனைக்காட்டினாலன்றி அது இருக்கிறதாக ஒப்புக்கொள்ளமாட்டே னென்றால் நாமென்ன செய்கிறது. அப்படிப்பட்ட குருடனை சற்றுநேரம் வெயிலில் நிறுத்திவைத்தால் "ஐயையோ! வெயில் சுடுகிறதே" யென்பான். இந்த வெயில்தானப்பா சூரியனுடைய ஒளி, இனியாவது சூரியனிருப்பதாக எண்ணிக் கொள் என்று கூறலாம். அதுபோல் கடவுளின்கிருபையையும் தண்டனையையும் அடைந்த புண்ணியபுருஷர்களையும் பாவிகளையும் காட்டிக் கடவுளுண்டென்பதை யொப்புக்கொள்ளும்படி கூறவேண்டும். "நரி கண்ணை மூடினால் உலகம் அஸ்தமிக்குமா" என்று நாம் சிலவேளை சொல்வதுண்டு. அதுபோல் நாஸ்திகர்கள் கடவுளில்லை யென்பதால் கடவுள் இல்லாமற் போய்விடமாட்டார். கண்ணுக்குத் தென்படாத விண் மீன்களைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் காண்பதுபோல் சாஸ்திரங்களி னுதவியால் கடவுளினிருப்பை யறியவேண்டும். எதிரிலுள்ளபொருள் தெரியாதது கண்ணின் தோஷமேயன்றி பொருளின் குறைவன்று. பஞ்சேந்திரியங்களில்லாவிட்டால் நாம் இப்பூமியிலுள்ள வஸ்துக்களை யனுபவிக்க முடியாது. ஏதேனும் ஓரிந்திரியத்தின் சக்தி குறைந்தால் அதனால் அடையக்கூடிய சுகம் கெட்டுப் போகிறது. ஜலதோஷம் அல்லது ஜலுப்புப்பிடித்தவன் புஷ்பத்தினுடைய வாசனையறியான். அதனால் புஷ்பத்துக்கு வாசனையில்லையென்று சாதிக்கலாமா? செவிடனாயிருப்பவன் சங்கீதத்தின்தொனியைக்கேட்கமுடியாது, அதனால் சங்கீதத்தில் இன்பமில்லை யென்னலாமா? சிலருக்கு நாக்கில் ஓர்வித தடிப்பு உண்டாகும். எந்தப் பதார்த்தத்தைத் தின்றாலும் ருசி தெரியாது. அதுபோல் ஞானக்கண்ணில்லாத மூடனுக்கு ஸ்வாமியின் மகிமை புலப்படாது. சர்வவல்லமையுள்ள ஸ்வாமியின் மகிமையை அறியாதமூடர்களும் இவ்வுலகத்தில் நாஸ்திகர்களெனப் பெயர்பூண்டு வசிப்பார்களானால் பெரியோர்களினருமை, ஞானத்தை விர்த்திசெய்யும் புஸ்தகம், பத்திரிகை ஆகிய இவற்றின் பெருமை ஆகிய இவைகளை யறியாதோர் பலரிருப்பது ஆச்சரியமன்று. மேலும் கடவுளுண்டென்பதை நிரூபிக்க அநேககார

ணங்க ளிருக்கின்றன. அறுகம்புல் நுணியில் தங்கிய பனித்துளி யளவாகியசுக்கிலமானது, கரசரணுதி அவயவங்களாக உருப்பட்டு உயிர்பெற்று எண்சாணுடம்பில் ஒருசாணளவாகிய தாய்வயிற்றில் இரப்பை ஜலப்பை மலப்பை முதலியவைகளுக்குரிய பல விடங்களுந்தவிர மிகவும் சிறிதாகிய கருப்பாசயப் பையினிடத்திற் கட்டுண்டிருந்து, அதனுல் உறுத்தப்பட்டு, உதராக்கினியில் வெந்து, பிரசூதவாயு முரித்துத்தள்ள அதோமுகமாய்த் திரும்பி நெருக்குண்டு சிசு உற்பவிக்கின்ற அதிசயத்தை என்னென்றுசொல்லுகின்றது. இப்படிச்செய்கின்றதார்? மனிதர்முகம் ஒன்றுபோல மற்ருென்றிருக்கலாகாதா? அதது வெவ்வேறு சாயலாயிருக்கின்றதே, அன்றியும் அனைவரும் ஒருவர்க்கொருவர் உருவம், குணம்,ஓசை, செய்கை முதலியவைகளாலும் பலவேறுவகைப்பட் டிருக்கின்ருர்களே, இதென்ன ஆச்சரியம்?

(இன்னும்வரும்.)

## NEWS AND NOTES.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



சிவபக்தசிகாமணிகளுக்கு

# முக்கிய அறிவிப்பு.

## ஸ்ரீ அருணசலபுராணம்

மூலமும்-உரையும்.

இதைப்போன்ற சுத்தப்பதிப்பாகப்பார்த்து வாங்கவும்.

---

இவ் வருணசலபுராணத்தை இதுகாறும் கிரந்தகர்த்தாவாகிய சைவ-எல்லப்பநாவலர்வாக்கை மாற்றியும் சொன்னயம் பொருணயம் வேறுபட்டுச் சிதைந்துக் கிடப்பதைக் கவனிக்காமலும் அநேகர் அச்சிட்டு விற்றுவந்தனர்கள். இப்புராணத்தைச் சுத்தப்பிரதியாக அச்சிற்பதிப்பிக்கும்படி திருவண்ணமலை தேவஸ்தான தருமகர்த்தராகிய இராய்பஹதர் ஆற்காடு-தனக்கோட்டி முதலியாரவர்கள் விரும்பியவண்ணம், சில வித்வான்களைக்கொண்டு நன்காராய்ச்சி செய்வித்து ஒவ்வொரு சருக்கத்தின் முதலில் அச்சருக்கத்தின் கருத்தைக் கத்தியரூபமாகச் சுருக்கியெழுதியும், திருவண்ணமலைத் தலத்தின் தேவாரம் திருப்புகழ் முதலிய தோத்திரங்களைத் திரட்டியும் ஒவ்வொரு சருக்கந்தோறும் கண்டோர் மனங்களிக்கும்படி விசித்திரமான ஐதீகப்படங்களும் அமைத்துச் சுத்தப்பிரதியாக சென்னைமுதலிய விடங்களிலுள்ள புஸ்தகவியாபாரிகள், அச்சுக்கூடத்தலைவர்கள் முதலானவர்களுடைய பொருளுதவியைக்கொண்டு தளமானகாயிதத்தில் அச்சிட்டு சென்னை மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்தலைவராகிய கொ-லோகநாத முதலியாரால் கவர்ன்மென்ட் ரிஜிஸ்டர்செய்து வெளியிடப்பட்டிருக்கின்றன.

இப்புராண விற்பனையினுல்வரும் இலாபத்தைக் கொண்டு இவ்வருடமுதல் சென்னைமுதலிய விடங்களிலுள்ள புத்தகவியாபாரிகளும், அச்சுக்கூடத் தலைவர்களும் சென்னையில் ஒருசபைசேர்ந்து, நினைத்தமாத்திரத்தில் முத்திதருவதாகிய திருவண்ணமலையில் ஸ்ரீசாஸ்வதி பூஜாமடம் என்று திருமடம் ஒன்று கட்ட வுத்தேசித் திருக்கின்றனர். ஆதலால், இந்த அருணசலபுராணத்தை விலைக்கு வாங்குவோர் ஷை ஸ்தலத்தில் கட்டப்படும் ஷை திருமடத்தின் தருமகைங்கரியத்துக்கு உதவிசெய்தவர்க ளாவதோடு, அதனுல்வரும் பெருஞ்சிவபுண்ணிய பலனையும் பெறுவரென்பது உண்மை! உண்மை!! சுபம்.

இகபரசுகசாதனி பத்திராதிபரும்,
மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்தலைவருமாகிய
கொ. லோகநாதமுதலியார்.
நெ-29, வைத்தியநாதமுதலிவீதி, சென்னை.